# செனட்டர் கே.எம்.பி.ராஜரத்தினவுக்கு வைத்த சூடு

UNDERGRADUATE LIBRARY — MAY 1970

Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 81
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சித்திரை 29 ஸபர் 20 ஞாயிற்றுக்கிழமை [3-5-70]

கட்டிடங்களுக்கு தேவையான
சாமான்கள்
இரும்பு வகைகள்
பூட்டு - பிணைச்சல்கள்
பெயின்ட் வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
நிதானவிலையில் பெற்றுக்கொள்ளலாம்

விஜயா
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
146, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
போன்:- 357

## இருவரைப் பலி எடுத்தது
## தெஹிவளை பாலத்தில் பரிதாபம்

கோட்டை, சனி

**செனட்டர் கே. எம்.பி. ராஜரத்தின இன்று மயிரிழையில் உயிர்தப்பினார். ஆனால் அவரை நோக்கிப் பாய்ந்த துப்பாக்கிக் குண்டுகள் அவருடன் காரில் வந்துகொண்டிருந்த மற்றிருவரின் உயிரைப் பலி கொண்டது.**

செனட்டர் கே. எம். பி. ராஜரத்தின இன்று நண்பகலளவில் கொழும்புக்கு காரில் வந்துகொண்டிருந்தார். அவருடன் மற்றுமிருவர் அதே காரில் முன்ஆசனத்தில் அமர்ந்திருந்தனர். கார் தெகிவளைப் பாலத்தில் வந்துகொண்டிருந்த சமயம் அதன் பின்னால் வந்துகொண்டிருந்த மற்றொரு கார் ராஜரத்தினவின் காரைத்தாண்டி முன்னே வந்து வழியை மறித்து நின்று கொண்டது. அந்தக் காரிலிருந்து இறங்கி வந்த ஒருவர் ராஜரத்தினவின் காரை அணுகியதும் திடீரென்று கையிலிருந்த துப்பாக்கியால் மடமடவென்று ஆறு தடவைகள் சுட்டார். காரின் முன் ஆசனத்தில் இருந்த இருவரும் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியானார்கள். அந்த இடத்திலேயே காருக்குள்ளேயே அவர்களிருவரும் மாண்டனர். மாண்டவர்களில் ஒருவர் பாதுக்கையைச் சேர்ந்த விமலதாசா என்பவராவார்.

திரு ராஜரத்தினவைக் கொலை செய்வதற்குத்தான் முயற்சி நடந்ததாகவும் இதுபற்றி இரண்டு பொலிஸ் கோஷ்டிகள் புலன் விசாரணை செய்து வருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர். கொலைசெய்ய உபயோகிக்கப்பட்ட துப்பாக்கி யந்திரத் துப்பாக்கி போலிருந்ததென்று ராஜரத்தின பின்னர் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக ஒரு மோட்டார்காரரை பொலிசார் தேடுகின்றனர்.

காரின் இலக்கம் 1ஸ்ரீ 602 என்றும் கறுத்த நிறமென்றும் பொலிசார் தெரிவித்தனர்.

# வாக்காளர் ஒவ்வொருவருக்கும் வாக்களிப்பு அட்டை கிடைக்கும்

## மே 5-ந்திகதி முதல் 20 வரை விநியோகம் நடைபெறும்

கொழும்பு, சனி

வாக்களிப்பு அட்டைகளை பெறுவதற்கு இம் மாதம் 5-ம் திகதி முதல் 20-ந் திகதிவரை ஒவ்வொரு வீட்டினுமுள்ள பிரதம குடியிருப்பாளர் வீட்டில் இருக்க வேண்டுமென போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் ஆலோசனை தெரிவித்திருக்கிறார்.

பிரதம குடியிருப்பாளருக்கு அன்றையதினம் வீட்டிலிருக்க வசதியீனமாக இருந்தால் பொறுப்புள்ள ஒருவர் வாக்களிப்பு அட்டைகளை பாரமேற்க வீட்டில் இருக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வாக்களிப்பு அட்டைகள் வழங்கப்பட்டபின்னர் வீட்டின் பொறுப்பாளரிடமிருந்து கையெழுத்துப்பெறும் முறை முதல் தடவையாக அமுல் செய்யப்படுவதாகத் தபால் இலாகாவைச் சேர்ந்த ஓர் அதிகாரி தெரிவித்தார்.

விநியோகிக்கப்படாத வாக்களிப்பு அட்டைகள் அந்தந்த தபால் கந்தோர்களிலும், உப தபாற்கந்தோர்களிலும் வைத்திருக்கப்படும். மே 20-ந் திகதி முதல் மே 27-ந் திகதிவரை வாக்களி[illegible] உரியவர்[illegible] தபாற்கந்தோர்களில் பெற்றுக்கொள்ளலாம்.

அட்டையும் வாக்காளருக்குச் சேரவேண்டுமென்பதாலேயே வாக்களிப்பு அட்டைகளை கையெழுத்துப் போட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டதாக தபால் இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தேர்தல் இலாகா வாக்களிப்பு அட்டைகளை மே 5-ம் திகதிக்கும் மே 10-ம் திகதிக்குமிடையில் தபாற்கந்தோர் உப தபால் கந்தோருக்கு அனுப்பி வைக்கும். வாக்களிப்பு அட்டைகளை வீடுகள் தோறும் விநியோகிக்க தபால் இலாகா நாடு முழுவதும் மேலதிகமாக ஊழியர்களை அமர்த்தக்[illegible] வாக்களிப்பு அட்டைகள் போயா தினங்களிலும் விடுமுறை நாட்களிலும் விநி

## வல்லிபுர ஆள்வாரிடம் வேட்பாளர் வேண்டுதல்

பருத்தித்துறை, சனி

உடுப்பிட்டித் தொகுதியில் போட்டியிடும் முன்னாள் எம்பியும் உபசபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரமும், இதே தொகுதியில் தமிழரசு வேட்பாளராகப் போட்டியிடும் திரு. க. ஜெயக்கொடியும் ஒரு சில அடிகள் தூரத்தில் நின்று பயபக்தியுடன் வல்லிபுரம்ஆழ்வார்கோவில் அதிகாலைப் பூசையிற் கலந்து கொண்டனர். ஒரு சில நிமிடங்கள் பொதுமக்கள் தமது வணக்கத்தை நிறுத்தி விட்டு இருவேட்பாளரையும் இமைகொட்டாது கவனித்துக் கொண்டு நின்றனர். இரு வேட்பாளரும் சூழலை மறந்து தம்மை மறந்து, பக்தியுடன் கடவுளை வணங்கிக் கொண்டிருந்தமை உருக்கமான காட்சியாகவிருந்தது. காலைப் பூசை முடிந்து பக்தர்கள் வெளியேறிக் கொண்டிருந்த போதும் இருவரும் வணங்கிக்கொண்டே நின்றனர்.

— —

## இன்று கடைசித்தேதி

கோட்டை, சனி

எதிர் வரும் பொதுத்தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க இதுவரை 70000பேர் விண்ணப்பித்துள்ளதாகதேர்தல் இலாகா தெரிவித்துள்ளது. தபால் மூலம் வாக்களிக்கும் கடைசித்தேதி இன்றாகும்.

## கருணாநிதியை கிரி சந்தித்தார்

சென்னை, மே 2

சுகவீனமுற்றிருக்கும் தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதியை இந்திய ராஜ்டிரபதி திரு. வி. வி. கிரி இன்று சென்று பார்வையிட்டார்.

தென் பகுதியிலுள்ள முக்கிய இராஜ்யங்களைப் பார்வையிட வந்துள்ள இராஜ்டிரபதி மற்றைய இராஜ்யங்களுக்கும் சென்று, இம்மாதம் 26-ம் திகதி வரையில் டில்லி திரும்புவார்.

## "தமிழுக்குப் பாடுபட்டவர் தமிழரசுக்கட்சியினரே தொடர்ந்தும் போராடுவோம்"

கொடிகாமம், சனி

"நாம்செய்த சேவையைச் சொல்லி வாக்குகளைக்கேட்க மாட்டோம். எம்மில், எமது கொள்கையில் நம்பிக்கையிருந்தால் எம்மை ஆதரியுங்கள். என்னருமைத் தாய்க்குலமே! உன் எதிர்காலக் குழந்தைகளின் நிலையைச் சிந்தித்துப்பார். அவர்களின் எதிர்காலம் ஒளிமயமாக விளங்க உங்களின் கடமையென்ன என்பதை எண்ணிப்பாருங்கள். இளைஞர் சமுதாயமே இதை நன்கு சிந்தியுங்கள்"

சாவகச்சேரி முன்னாள் பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினம், மீசாலை புத்தூர்ச் சந்தியில் நடந்த தமிழரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

இக்கூட்டத்துக்கு திரு. சி. கணபதிப்பிள்ளை தலைமை வகித்தார், திரு. நவரத்தினம் மேலும் தொடர்ந்து கூறியதாவது, "நாம் உரிமைக்காகச் சத்தியாக்கிரகம் செய்தோம். எமது மொழிக்காகக் கொள்கைக்காகப் போராடினோம், அதை நாம் தொடர்ந்தும் செய்வோம் நான் எனது தொகுதிக்கு என்னை எதிர்த்துப்போட்டியிடும்கட்சியினரிலும்பார்க்க எத்தனையோ மடங்கு சேவை செய்துள்ளேன். [illegible] நான் சொல்லிக்காண்பிக்கமாட்டேன். இச்சேவைகளைப் பற்றி எனது தொகுதி

மீன்பிடிக்கூட்டுத்தாபன

## ஊழியர் 179 நாட்களின் பின்வேலைக்குத் திரும்பினர்

கோட்டை, சனி

கடந்த 179 நாட்களாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் நேற்று வேலைக்குத் திரும்பியுள்ளதாக கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

விகிதர் தாக்கைச் சேர் ... கள் ஏற்கனவே இடமாற்றம் செய்யப்பட்டிருந்த இடங்களில் தங்கள் கடமைகளைப் பொறுப்பேற்பார்கள் என்றும், அந்த அதிகாரி கூறினார்.

உயர் அதிகாரிகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இவ

## 'தற்போதைய ஆட்சி முறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்பாளரும் சூழலைமறந்து தம்மை மறந்து, பக்தியுடன்

...ளிக்கும் கடைசித்தேதி இன்றாகும்.

...ஒருவர் வாக்களிப்பு அட்...

...தோர்களிலும் வைத்திருக்கப்படும். மே 20-ந் திகதி முதல் மே 27-ந் திகதிவரை வாக்களிப்பு அட்டைக்கு உரியவர்கள் அவற்றைத் தபாற்கந்தோர்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு வாக்களிப்பு ...க்க தபால் இலாகா நாடு முழுவதும் மேலதிகமாக ஊழியர்களை அமர்த்தக்கூடும்.

வாக்களிப்பு அட்டைகள் போயா தினங்களிலும் விடுமுறை நாட்களிலும் விநியோகிக்கப்படலாம்.

# ‘தற்போதைய ஆட்சி முறையில் தமிழன் பிரதமராக வரமுடியாது’

## வல்வெட்டித் துறையில் இளஞ்செழியன்

வல்வெட்டித்துறை, சனி

‘பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள சீன, ரஷ்யா போன்ற இடங்களிலுள்ளதுபோல ஒரு கட்சியை இலங்கையிலும் ஏற்படுத்த முடியுமானால் இங்கிருந்து 18 மைலுக்கு அப்பால் இருக்கும் இந்தியாவிலுள்ளதுபோல ஒரு கட்சியை இலங்கையிலும் ஏன் ஏற்படுத்தமுடியாது?

வல்வெட்டித்துறை கடற்கரை மைதானத்தில் பருத்தித்துறை தொகுதியில் போட்டியிடும் திரு. ஆ. விசாகரத்தினத்தை ஆதரித்து இலங்கை திராவிட முன்னேற்ற கழக முன்னாள் செயலாளர் திரு. ஏ இளஞ்செழியன் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. பொன் நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு இளஞ்செழியன்தொடர்ந்து கூறியதாவது: இன்றைய ஆட்சிமுறையில் நமக்கு நம்பிக்கையில்லை இந்த ஆட்சிமுறை ஒருகுறிப்பிட்ட இனமக்களுக்கு மட்டுமே சாதகமாக அமைக்கப்பட்டிருக்கிறது இவ்ஆட்சிமுறை ஒரு பிரிவினையை உண்டாக்கியுள்ளது. ஒரு தமிழ் மகனோ, ஒரு கிறிஸ்தவனோ அல்லது ஒரு முஸ்லீமோ இந்நாட்டுப் பிரதமராக எக்காலத்தும் வரமுடியாது. அதேபோன்று உயர்தர உத்தியோகத்திற்கும்வரமுடியாது. அத்துடன் இப்போது பெரும்பான்மையினர் மட்டும்தான் பெற்ற சுதந்திரத்தைஅனுபவிக்கின்றனர். இதற்காகத்தான் நாம் ஆட்சி முறைமாற வேண்டும் எனக்கேட்கிறோம்.

திரு. உ. நெடுமாறன் பேசுகையில் கூறியதாவது: தமிழ்மக்களை தமிழ்த் தலைவர்கள் சரியான பாதையில் வழிநடத்தி செல்லாத காரணத்தாலேதான் திராவிட முன்னேற்றக்கழகம் அரசியலில் குதிக்கமுற்பட்டது. தமிழ்க்காங்கிரஸ் கட்சியினரோ, தமிழரசுக் கட்சினயிரோ அரசாங்கத்துடன் சேர்ந்துகொள்வதனால் தமிழினத்தின் உரிமைகளை எல்லாம் சிங்களக்கட்சிகளுக்கு விட்டுக்கொடுத்துவிடுகிறார்கள்.

திரு. ஆ: விசாகரத்தினம் பேசுகையில், நமது இப்போதைய சாசனம் மாற்றி அமைககப்பட்டாலன்றி தமிழினம் ஒருபோதும் இந்நாட்டில் உரிமை பெற்றுவாழ முடியாது என்றார்.

# பங்கீட்டரிசி புத்தகத்தை கொடுத்தவர்க்கு அரிசிஇல்லை

— கெனமன்

வெல்லம்பிட்டியா, சனி

‘நாம் அதிகாரத்துக்கு வந்தால் மக்களுக்கு அவர்கள் இழந்த இருபடி அரிசியைத் திரும்ப வழங்குவோம் சிலர் ஏற்கனவே திரு டட்லி சேனநாயக்காவிடம் தங்கள் பங்கீட்டரிசிப் புத்தகங்களை கொடுத்துள்ளார்கள் இவர்களுக்கு நாங்கள் அரிசி வழங்க மாட்டோம்.’

வெல்லம்பிட்டியாவில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய கொழும்பு மத்திய பகுதி வேட்பாளர் திரு. பீற்றர் கெனமன் மேற்கண்டவாறு கூறினார்

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் கடந்தபொதுத் தேர்தலின் போது திரு. டட்லி சேனநாயக்கா தேசிய ஒற்றுமை பற்றிக் குறிப்பிட்டார். உண்மையில் நாட்டில் தேசிய ஒற்றுமையை நிலைநாட்டினரா வடக்கில் எங்களது கூட்டணிக்கட்சிஅபேட்சகர்களே தமிழரசுக் கட்சியுடன்போட்டி போட்டார்கள் இந்தத் தடவையும் போட்டியிடுகிறார்கள்; டட்லியின் கட்சியைச்சேர்ந்த எவராவது போட்டியிடுகிறார்களா? ஜனநாயகத்தைப்பற்றி திரு. டட்லி பேசுகிறாரே 1100 நாட்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழ்நாட்டைஆண்டதை மறந்துவிட்டாரா? நாட்டில் சரியான ஜனநாயகம் நிலவாவண்டுமானால் மக்கள் இம்யாதம் 27-ம் திகதி திருமதி பண்டாரநாயக்காவின் தலைமையின் கீழ் தமதரசாங்கத்தையமைத்துக் கொள்ள வேண்டும்எனக்குறிபிட்டார்

### ஆயுத போராட்டத்துக்கு முன்

# தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டுமாம்

## பருத்தித்துறையில் திரு. சண்முகதாசன்

பருத்தித்துறை, சனி

‘‘1956-ல் எட்டு ஆசனங்களைமட்டும் கைப்பற்றிப் படுதோல்வி யடைந்தபோது யூ. என். பி. யின் சவப்பெட்டிக்குக் கடைசிஆணி அறைந்துவிட்டதாக கொல்வின் ஆர். டி. சில்வா கூறினார். ஆனால் அதே யூ. என். பி, 1965-ல் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றி இன்றும் ஆண்டு வருகிறது, இதிலிருந்து ஆட்சிமன்றமுறை மூலம் முதலாளித்துவத்தை ஒழித்துக்கட்ட முடியாதென்பது தெளிவாகிறது,’’

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (பீக்கிங்) பொதுச் செயலாளர் திரு. நா. சண்முகதாசன் வடமராட்சி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் இங்கு நடாத்திய லெனின் விழாவிற் கலந்து உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. கே. செந்திவேல் தலைமைவகித்தார். தொடர்ந்து பேசிய திரு. சண்முகதாசன் குறிப்பிட்டதாவது:

‘‘மக்களின் அடிப்படைப் பிரச்னைகளைக் கூட்டுமுன்னணியினரோ அல்லது யூ. என், பி. யோ, யூ. என் பி. ஆதரவாளரான தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் கட்சியினரோ தீர்க்கமுடியாது.

முதலாளித்துவத்தை முறியடிக்க சகல புரட்சிகரசக்திகளையும் மா-சே-துங் வழியில் ஐக்கியப்படுத்தி. ஆயுதம் தாங்கிய போராட்டத்தை ஆரம்பித்து கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும். அதற்கு முன்னோடியாக ஆட்சிமன்றத் தேர்தல்களை மக்கள் பகிஷ்கரிக்கவேண்டும்’’

## 15-ம் திகதிக்கு முன் பரீட்சை முடிவுகள்

கோட்டை, சனி

இம்மாதம் 15ம் திகதிக்கு முன்னர் கடந்த வருடம் டிசம்பர்மாதம் நடைபெற்ற ஜீ சீ ஈ (சாதாரண) பரீட்சையின் முடிவுகள் வெளியாகுமெனப் பரீட்சைப் பகுதியினர் தெரிவித்துள்ளார்கள் மூன்று லட்சம் மாணவர்கள் தோற்றிய இப்பரீட்சையின் பெறுபேறுகள் கம்பியூட்டர் முறைப்படி தயாரிக்கப்படுகின்றன.

## ‘பொங்கல் பஸ்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு போக்குவரத்திலீடுபடும் ஓர் இ. போ. ச. பஸ் சேவையிலீடுபடும் பொழுது இடையிடையே ‘டப் டப்’ என்று பலத்த சப்தம் போடுவதால் இதில் பிரயாணம் செய்யும் சிறுவர்கள் சிறிது அச்சத்துக்குள்ளாகின்றார்களாம். இந்த பஸ் இவ்விதம் வெடிச் சப்தம் கிளப்புவதால் இதை ‘பொங்கல் பஸ்’ என்று சிலர் செல்லமாக அழைக்கத் தொடங்கியுள்ளார்கள்.

...டிருந்த ...கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் நேற்று வேலைக்குத் திரும்பியுள்ளதாக கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

லிகிதர் தரத்தைச் சேர்ந்த 40 பேர் நேற்று வேலைக்கு வந்ததாகவும், இவர்கள் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

உயர் அதிகாரிகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இவர்கள் வேலைக்குத் திரும்பினராம்.

## லொறி-மோட்டார் சைக்கிள்

# விபத்தில் சிக்கிய பொலிஸ் கான்ஸ்டபிள் மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மோட்டார் விபத்தில் சிக்குண்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர்நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

சங்கானை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் எல். டி. டபிள்யூ. குணதிலக என்பவரே மரணமானவராவார்.

நேற்று முன்திவம் சங்கானையில் நடைபெற்ற மோட்டார்சைக்கிள் லொறி விபத்தில் சிக்குண்ட மற்றும் ஒருவரான திலகரத்தின என்பவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கல்லேற்றி வந்த லொறி ஒன்று வளைவு ஒன்றில் திரும்பும்போது லொறியின் பின்புறம் மோட்டார் சைக்கிளில் மோதுண்டதால் விபத்து ஏற்பட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. லொறி உரிமையாளரும் சாரதியுமான நாகன் மாணிக்கம் என்பவர் ரூபா 1000 பிணையில் செல்லஅனுமதிக்கப்பட்டு இம்மாதம் 17-ம் திகதி மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிடப்பட்டார்.

# ‘தொழிலாளர் தினமாக கொண்டாடியது நாம் தான்’

யாழ்ப்பாணம், ஞாயிறு

‘கடந்த வருடமும் சரி, இவ்வருடமும் சரி இத் தினத்தை மே மாதம் 1ம் தேதியன்று தொழிலாளர் தினமாக கொண்டாடிய ஒரே ஒரு கட்சி நமது கட்சிதான். இந் நாட்டிலுள்ள மற்றும் கட்சிகள் எல்லாம், இத் தினத்தை தேர்தல் பிரசார நோக்கத்துடனேயே பயன்படுத்து கின்றன. ஆட்சி மன்றத்தில் நம்பிக்கை வைக்காத நாங்கள் தான் இத் தினத்தை தொழிலாளர் தினமாகக் கொண்டாடு கின்றோம்’.

யாழ்ப்பாணம நகரமண்டபத்தில் திரு ஏ. கே. சுப்பிரமணியம் தலைமையில்நேற்று முன் தினம் நடந்த சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் மேதின விழாவில். திரு. கே செந்தில்வேல் பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

நகரமண்டபத்தின் உள்ளேயும், வெளியேயும் பெண்கள் உட்பட ஏராளமானோர் திரண்டிருந்தனர் பலர் ‘மாவோ’ பாட்ஜ் அணிந்திருந்தனர்.

திரு. செந்தில்வேல் மேலும் கூறியதாவது: அடக்கப்பட்ட; ஒடுக்கப்பட்ட மக்களின் விமோசனத்திற்காக இன்று பாடுபடும் ஒரே ஒரு கட்சி நமது கட்சிதான். பிற்போக்கு வாதிகளான, ஐக்கிய தேசிய கட்சியினரும், சுதந்திரக் கட்சியினரும் ஆட்சிமன்றத்தில்நம்பிக்கை வைத்திருக்கின்றனர். தொழிலாளர்களின் தோழர்களென ஒரு காலத்தில் தங்களைக் கூறிக்கொண்டு, தொழிலாளர்களையே காட்டிக்கொடுத்த சில இடதுசாரிகளும், ஆட்சி மன்றத்தில் நம்பிக்கை வைத்திருக்கின்றனர்.

இந்நாடு சுதந்திரம் பெற்ற நாள் முதல் இதுவரை தொழிலாளர் வர்க்கம் பிற்போக்கு வாதிகளினால் நசுக்கப்பட்டு வருவதையே நாம் காண்கின்றோம். சிங்கள, தமிழ் மக்கள் மத்தியிலுள்ள ஒதுக்கப்பட்ட மக்கள், ஒன்று சேர்ந்து புரட்சிமூலம், புதிய தோர், அரசாங்கத்தை அமைப்பதன் மூலமே, இந்நாட்டு பாட்டாளி வர்க்கத்திற்கு விமோசனமளிக்க முடியும்.

...எத்தனையோ மடங்கு சேவை செய்துள்ளேன். இவைகளை நான் சொல்லிக்காட்டியிருக்கமாட்டேன். இச்சேவைகளைப் பற்றி எனது தொகுதி மககள் நன்கு அறிவார்கள்’’

இககூட்டத்தில் திரு. மு. ஆலாலசுந்தரம் கூறியதாவது. ‘‘மகாவலி கங்கை யாழ்ப்பாணத்துககு வர மாட்டாது. அது போத்தலில்தான் வரும், இதைத் தமிழ்மககள் நன்கு உணர வேண்டும். அப்போதுதான் உண்மையை நன்கு அறிய முடியும். தமிழ்மக்கள் தங்கள் மண்ணை சிங்களக குடியேற்றத்திநின்று காப்பாற்ற வேண்டும் இன்றேல் தமிழன் வாழமுடியாது’’

இக்கூட்டத்தில் செனட்டர் எஸ். நடராசா, மு. சி. பதஞ்சலி, ஜனுப் முத்துராசா ஆகியோரும் மற்றும் பலரும் பேசினர்.

### உசனில்

உசனில் நடைபெற்ற கட்சிப் பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் திரு. வி. என். நவரத்தினம் கூறியதாவது, ‘‘சென்ற முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, தமிழில் தங்கள் குழந்தையைத் தாலாட்டியஇடத்தில் இன்று சென்று பார்த்தால், அங்கே சிங்கள மொழியில் தாலாட்டுப் பாடுவதை அறியலாம். இவற்றுககுக் காரணம் யார் எம்மையெல்லாம் காட்டிக கொடுத்தவர்கள்தான்’’

மிருசுவில் கி. ச தலைவர் திரு. சி. பாலசிங்கம்தலைமை வகித்த இககூட்டத்தில் திரு நவரத்தினம் தொடர்ந்து கூறியதாவது ‘‘இன்று தமிழகம், மலேயா போன்ற நாடுகளில் தமிழ்மொழிக்கு எவ்வளவு மதிப்பு இருக்கிறதோ. அதிலும் பார்க்க ஈழத்தில் தமிழின் மதிப்பு மிகக் கூடுதலாகவிருககிறது. இதற்குக காரணம் தமிழுககாகவும், தமிழ் மககளுககாகவும் போராடும் தமிழரசுக கட்சியே. அரசாங்கம் எந்த அறிவித்தலைச் செய்யினும் அது தமிழிலும் இருகக வேண்டும்என வாதாடியவர்கள் எங்கள் கட்சியினர்’’

இககூட்டத்தில் திரு இடா சிவகுரு, திரு நா அருணசலம், ஜனுப் முத்துராசா. மாறன் செல்லையா, செல்வி ஜவ கிருபைராணி ஆகியோர் உட்படப் பலர் பேசினர்.

திரு வீ. கந்தசாமி பேசும்போது, கடந்த 40 வருடகால தொழிலாளர் சரித்திரத்தில், இம் முறைதான் முதன் முதலாக, தேர்தலை பகிஷ்கரிக்கும்படி தொழிலாளர் கேட்கப்பட்டுள்ளனரென்றும், கூறினர்,

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

ONE-DOLLAR

டாலர்

அலுமினியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 3—5—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 நாளைய சந்ததி.

இரவு 6-15 வீணை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 வயலின் 7-45 சித்திரம் 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி., 9-30 பேச்சு, 9-40 கர்னாடக இசை, 10-30 செய்திச்சுருக்கம்.


## வரி விளம்பரம்

### தேவை

மிக பிரசித்தி பெற்ற கைத்தொழில் ஸ்தாபனத்திற்கு முதலீடு செய்யும் பங்காளி ஒருவர் உடனே தேவை: நல்ல வருவாய் உள்ள தொழில். தபால் மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2090, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2090

### கல்வி

ஜீ. சீ. ஈ. கலை/விஞ்ஞான/வர்த்தக/சிங்கள (காலை/மாலை) வகுப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம். யாழ்ப்பாண டியூடோறியல்கல்லூரி, 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2089


# வேட்பாளர் அறிமுகம்

### திரு. கதிரவேலுப்பிள்ளை (தமிழரசுக்கட்சி அபேட்சகர்)

1948-ம் ஆண்டு முதல் அரசியல் தொடர்புள்ளவராகவும், 56-ம் ஆண்டு முதல் அகில இலங்கை தமிழரசுக் கட்சியின் தீவிர



வாதியாகவும் விளங்கிவரும் கோப்பாய் தொகுதியின் தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை தமிழரசுக் கட்சியால் நடாத்தப்பட்ட ஸ்ரீ எதிர்ப்பியக்கம், சத்தியாக்கிரகம் ஆகியவற்றில் பங்குபற்றிப் பலமுறை தடுப்புக்காவல் சிறையில் வைக்கப்பட்டவர். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனக் கருதிமக்களுக்காகவே சேவையாற்றி வருவதுடன் தமிழரசுக்கட்சியின் இட்சியங்கள் அடிப்படைக்கொள்கைகள் ஆகியவற்றுக்காகப் போராடுவதே தனது கடமையெனவும் இவர் கூறுகிறார்.

குறிப்பாக கட்சியின் அடிப்படை லட்சியங்களிலொன்றான தீண்டாமை ஒழிப்பியக்கத்திற்காகச் சொல் செயல் ஆகியவற்றால் போராடிவருபவர்.

60-ம் ஆண்டில் யாழ்ப்பாணத் தொகுதியில் இருமுறை தமிழரசுக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட இவர் கடந்த 65-ம் ஆண்டில் கோப்பாய் தொகுதியில் முதன் முறையாக தமிழரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு ஆட்சிமன்றப் பிரதிநிதியாசத்தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த 5 ஆண்டுகாலங்களில் கட்சியின் கட்டளைப்படி தாம் செய்த சேவைகளில் தமிழ்மக்களை சாதிமத பிரதேச வேறுபாடின்றி ஒன்ருக்க முயற்சியெடுத்ததும், தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை வெற்றிகரமாக நடாத்தியதும் சமூகக் குறைபாட்டு விலக்குச் சட்டத்தை இந்நாட்டில் ஏற்படுத்தியதும், மாவை ஆலயப் பிரவேச விவகாரம் குறித்து வழக்கறிஞர் திரு. சுந்தரலிங்கத்தால் நடாத்தப்பட்ட வழக்கில் எதிரிதரப்பில் சட்டமூலம் வாதாடி அவரையே குற்றவாளியாகக்கண்டு நீதிமன்றம் தீர்பபு வழங்குமாறு செய்ததும், அச்சுவேலியில் கைத்தொழில் பேட்டையை உருவாக்கியதும் எமதுமுயற்சியால் ஏற்பட்ட பெரும் வெற்றியாகுமெனக் கூறுகிருர் திரு. கதிரவேலுப்பிள்ளை. அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை மூலம் நமது நாட்டுப்பொருளாதாரம் முன்னேறும். இப்பேட்டையில் முதலில் 35 தொழிற்சாலைகள் நிறுவப்படும். 5000 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கமுடியும். செல்வநாயகபுரம் வீடமைப்புத் திட்டமூலம் ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுத்தல், கோப்பாய் தொகுதியில் உரும்பராய், திடற்புலம், புத்தூர், வேம்பிராய், வாதரவத்தை, சிங்கன் கண்டி ஆகிய கிராமங்கள் அபிவிருத்தித்திட்டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்களை மேலும் அபிவிருத்தி செய்வதே எனது இலட்சியம் எனக் கூறுகிருர் திரு. கதிரவேலுப்பிள்ளை

0 0 0

### திரு. தா. குணரத்தினம் தமிழ் காங்கிரஸ் கட்சி அபேட்சகர்.



இலங்கையின் பெரும்பான்மை இனத்தவராகிய 'சிங்கள மக்களுடன் தமிழ் மக்களும் சம உரி

## கோப்பாய்த் தொகுதி

தமிழ் மக்கள் மத்தியில் இன்று ஏற்பட்டுள்ள அரசியற் பிரிவினையே எமது முன்னேற்றத்துக்குத் தடையாகவுள்ளது எனக் கூறுகிருர் திரு. குணரத்தினம். அடையாள அட்டை மசோதாவில் திருத்தங்கள் பல செய்யப்பட்டபின்னரே அதனை ஏற்றுக்கொள்ள முடியுமெனவும் சகல மத, கலாச்சார, மொழிப் பிரிவுகளையுடைய பூரணத்துவமான பிரிவினையற்ற இராமநாதன்பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட வேண்டுமெனவும், அப் பல்கலைக்கழகத்தில் போதனு மொழியாகத் தமிழ் விளங்கவேண்டுமெனவும் இவர் கூறுகிருர்.

அப்பொழுது 95 சத வீத தமிழ்மாணவர்கள் மேற்படி பல்கலைக்கழகத்தில் கல்வி வசதிபெற முடியும். செல்வநாயகபுரம் வீடமைப்புத் திட்டம் திருத்தப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவிக்கிருர். பாடசாலைகளைப் பொதுமக்களும் நிறுவவும், நிர்வகிக்கவும் அரசாங்கம் அதிகாரமளித்தல் அவசியம், எதிர்வரும் பொதுத்தேர்தல் ஆட்சிமன்றப் பிரதிநிதியாகச் சந்தர்ப்பமளிக்குமாயின் வேலையற்ற வாலிபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கவும் பட்டதாரிகள் பிரச்னை தீரவும் ஆவன செய்வேன் எனவும் கூறுகின்றுர்.

குடியிருக்க வீடற்ருேருக்கு வீடுகட்டிக் கொடுத்தல், அச்சுவேலி அரசினர் ஆஸ்பத்திரி விஸ்தரிப்பு நிலாவரைத் திட்டவிஸ்தரிப்பு, மின் அபிவிருத்தி ஏற்படுத்தல் உப்பு நிலங்களை விஞ்ஞான முறையில் விளை நிலமாக்கி நெல் அபிவிருத்தி செய்தல் என்பவை இவரது சேவைத்திட்டங்களாகும்.

0 0 0

### திரு. மா. துரைராசா (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகர்)



இடதுசாரிக் கட்சிகளான லங்கா சம சமாஜக் கட்சி கம்யூனிஸ்ட்

சந்தர்ப்பம் அளிக்குமாறும் பொதுமக்களைக் கேட்டுள்ளார் திரு. துரைராசா.

கோப்பாய்த் தொகுதியில் இரு மக்கள் வங்கிக் கிளை அமைத்து, தொழிலாளர்களுக்கு கடன் வசதியளிக்கப்படுமெனவும், மொழி பேதமின்றி ஆசிரியர்களுக்குச் சம சம்பளம், தமிழ்ப் பண்டிதர்களுக்கும், புலவர்களுக்கும், வித்வான்களுக்கும் சிங்களப் பண்டிதர்களைப் போன்று சமசம்பளம் அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும், தமிழ்ப் பாடசாலைகளில் இதுவரை நிரப்பப்படாதிருக்கும் முதலாம், இரண்டாந்தர ஆசிரியர்கள் பதவிகள் நிரப்பப்படுமெனவும் அவர் மேலும் உறுதியளித்துள்ளார்.

0 0 0

### திரு. எஸ். கனகசுந்தரம் (சுயேச்சை அபேட்சகர்)

55 வயது நிரம்பிய திரு. எஸ். கனகசுந்தரம் திரு. ஹன்டிப் பேரின்பநாயகத்தின் அரசியல் மாணவன் கல்விபயிலும் காலம் முதலே அரசியல் வாதியாக விளங்கிச் சிறிதுகாலம் அரசாங்கபதவி வகித்து அதிலிருந்து ராஜிஞமாச்செய்து தமிழரசுக்கட்சியின் தீவிர உழைப்பாளியாகவும், 15 ஆண்டு காலம் கட்சியின் உறுப்பினராகவும், உடும்பராய் தமிழரசு வாலிப முன்னணியின் ஸ்தாபகராகவும் பத்து ஆண்டு காலம் அதன் தலைவராகவும்கடமையாற்றியவர்.

தமிழரசுக் கட்சியைவிட்டு வெளியேறி தமிழர் சுயாட்சிககழகத்தில் சேர்ந்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் கோப்பாய்த் தொகுதியில் முதலாவதாக கழகத்தின் சார்பில் சுயேச்சை வேட்பாளராகபோட்டியில் குதித்துள்ளார்.

தமிழரசுக்கட்சி தனது அடிப்படைக் கொள்கைகளையும் இலட்சியங்களையும் காற்றில் பறக்கவிட்டு விட்டதாலும் கட்சியின் ஆரம்பநோக்கம் கைவிடப்பட்டதாலும், தமிழ்மக்களை அவர்கள் விடுதலைப்பாதையில்இட்டுச்செல்வார்கள்என்பதில் நம்பிக்கையின்மையாலுமே தமிழரசுக்

# சேவியர் தெரிவுக் கோஷ்டி 4 விக்கெட்டால் வென்றது

## இம்மனுவேலின் சிறப்பான பந்துவீச்சு: சுவைமிக்க கிரிக்கெட் மோதல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் சேவியர் தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டிக்கும், கொழும்பு கனகநாயகம் தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில், கடந்த இருநாட்களாக, யாழ்: மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற, சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில், சேவியர் கோஷ்டி, மிகச் சாதுரியமாக வெற்றி பெற்றது.

கொழும்பு கனகநாயகம் தெரிவுக் கோஷ்டியில் இலங்கையில் பிரபல்யமான கிரிக்கெட் வீரர்களான, பாலா பிரான்ஸிஸ், சாந்தி பீரிஸ், நசல்ஹாமர், கனகநாயகம் போன்ற வீரர்களும், சேவியர் தெரிவுக் கோஷ்டியில், யாழ்ப்பாண கிரிக்கெட் முன்னணி வீரர்களான எம். தெய்வேந்திரா, எம். சுரேந்திரா, சி. சூரியகுமார், ஈ. இம்மனுவேல், டி. புரட்சிதாசன் ஆகியோரும் அங்கம் வகித்தனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய கனகநாயகம் கோஷ்டி எல்லாவிக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 81 ஓட்டங்களைப் பெற்றது. இதில் உப்பாலி பெரேராவும், ஆர். ஹாமரும் முறையே 18, 17 ஓட்டங்களைப் பெற்றனர். ஈ. இம்மனுவேல் சிறப்பாகப் பந்து வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்திஞர். சி. சூரியகுமார் 25 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்திஞர்.

சேவியர் கோஷ்டி முதல் இனிங்ஸில் மொத்தம் 158 ஓட்டங்களைப் பெற்றது ரி. தயாசிங்கம் 38 ஓட்டங்களையும், எம். தெய்வேந்திரா 22 ஓட்டங்களையும், எம். சுரேந்திரா. சி. சூரியகுமார் தலா 17 ஓட்டங்களையும் பெற்றனர் சாந்தி பீரிஸ் 39 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்திஞர்,

கனகநாயகம் கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 122 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டி 9 விக்கெட்டுகளை இழந்தபோது ஆக 88 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது. இதன் மச்சந்திரனும் மிகவேகமாக ஓட்டங்களைப் பெற்று தமது கோஷ்டிஓட்டங்களின் எண்ணிகையை 122ஆக உயர்த்தினர். ரி. செல்வராசா 38 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டமிழந்தார் ஆர். ஹாமர் 22 ஓட்டங்களையும், பற்குணராசா, 17 ஓட்டங்களையும் பெற்றனர் வீரர் ஈ. இம்மனுவேல் இந்த இன்னிங்ஸிலும் சிறப்பாகப் பந்துவீசி 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றிஞர்.

சேவியர் கோஷ்டி தனது

[4-ம் பக்கம் பார்க்க]

## இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மாவட்ட அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 'பி' பிரிவுக்கான சாம்பியன் மோதல் இன்று யாழ். விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கின்றது.

இந்த 'பி' பிரிவுக்கான இறுதிப் போட்டியில், யாழ். மாநகரசபைக் கோஷ்டியும் காரைநகர் கடற்படைக் கோஷ்டியும் மோதிக்கொள்ளும். (தே. நி.)

## "போராடப் போகிறேம் என்பதில் அர்த்தமில்லை"

— வி. நவரத்தினம்

ஊரதீவு, சனி

"அடையாள அட்டை மசோதாஅமுல் நடத்தப்படுகின்றபோது அதைஎதிர்க்கின்ற தகுதி எனக்கும் எனது கழகத்திற்கும் தான் உண்டு. ஏனையவர்கள் இந்த மசோதாவுக்கு ஆதரவாக ஆட்சிமன்றத்தில் கைஉயர்த்தியபோதே இந்தத் தகுதியை இழந்துவிட்டார்கள் அடையாள அடையைப் போன்ற அவமானச் சின்னம் எதுவுமில்லை"

இவ்வாறு ஊர்காவற்றை சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் தமிழர் சுயாட்சிக் கழகத்தலைவர் திரு. வி. நவரத்தினம் பேசுகையில் கூறிஞர்.

திரு. மனுவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. நவரத்தினம் மேலும் கூறியதாவது;-

தமிழரசுக் கட்சியின் வேண்டுகோளின்படி தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படிக்காதிருந்தார்கள் சிங்களம் படிக்க மறுத்த காரணத்தினுல் முதன் முதலாக நயினுதீவைச் சேர்ந்த சுரேந்திரநாதனும், குரும்பசிட்டியைச் சேர்ந்த க. பத்மநாதனும் முதன் முதலாக வேலையினின்றும் நீக்கப்பட்டார்கள்.

நாங்கள் கொடுத்த வாக்

இதோ! ரேமியா பரவசமூட்டும் ஓர் புதிய பவுடர்!

அறிவித்தல்

உடுவில் தொகுதி தேர்தல் கூட்டம், புத்தம்புலவு சண்டிலிப்பாயில் இன்று (3-5-70) மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும். தோழர்கள் லெஸ்லி குணவர்த்தன, வி. பொன்னம்பலம், பொ. நாகலிங்கம் முதலியோர் பேசுவர். 2246

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி நம்பியார் - தங்கவேலு நடித்த

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி நம்பியார் - தங்கவேலு நடித்த

**ஹரிச்சந்திரா**

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

சிவாஜி, கே ஆர் விஜயா நாகேஷ்-பாலாஜி-பேபி ராணி நடித்த

**திருடன்**

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்

சிவாஜிகணேசன் — பாரதி மற்றும் பலர் நடித்த


**தங்கச் சுரங்கம்**

(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

மகத்தான 81-வது தினம்

**வெலிங்டன்** யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
(போயா, பிரிப்போயா காலை 10-30)
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற வெற்றிச்சித்திரம்



சிவாஜிகணேசன் - பத்மினி

பாலையா, நாகேஷ், நம்பியார் மற்றும் பலர் நடித்த

**தில்லானா மோகனாம்பாள்**

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா ரங்கராவ், பேபி பத்மினி, நாகேஷ்

இன்னும் பலர் நடித்த

பி. நாகிரெட்டி அளிக்கும்

**நம் நாடு**

(ஈஸ்ட்மென் கலர்




...யின் பெரும்பான்மை இனத்தவராகிய 'சிங்கள மக்களுடன் தமிழ் மக்களும் சம உரிமையுடன் பரவலாகச் சகோதரத்துவ முறையில் வாழ வேண்டும். சர்வ கட்சி மாநாடு மூலமே இந்நாட்டில் மொழிப்பிரச்னை தீர முடியும். சமஷ்டி அரசியல் இந்நாட்டில் எக்காலத்திலும் ஏற்படக்கூடிய தொன்றல்ல மாவட்டசபை தமிழ் மக்களை வடக்கு கிழக்கு மாகாணங்களில் அடக்கி ஒடுக்கும் தன்மையுடையது. எனவே தான் மாவட்ட சபையை நாம் எதிர்க்கின்றோம்'

இவ்வாறு கூறுகிறார் கோப்பாய்த்தொகுதியில் போட்டியிடும் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர் புரக்டர் திரு. தா, குணரத்தினம். 58 வயது நிரம்பிய இவர் 60ம் ஆண்டு முதல் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் அபேட்சகராக கோப்பாய் தொகுதியில் போட்டியிட்டு வருகிறார்.


இன்று மட்டும்

**வெஸ்லிசினிமா**

மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
ஜெய்சங்கர் - விஜயலட்சுமி நடித்த

**வல்லவனுக்கு வல்லவன்**

**ஸ்ரீ காலிங்கன்**

இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
ASA NOVA 70
(adults only)

REGAL JAFFNA
Daily
4-45, 7 & 9-45 p.m.
Pre poya, Poya 10-30 A.M
George Peppard
&
Gayle Hunnicut
in
P. J.
(Adults only)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Prepoya, Poya 4 shows
Clint East wood
&
Susan Clark
in
COOGAN'S BLUFF
(colour)




இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ சார்பு), ஸ்ரீ லங்கா சுதந்திரகட்சி ஆகிய கூட்டு முன்னணிக் கட்சிகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமிழ்பேசும் மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ளது என்பதை மக்களுக்கு நிரூபித்தற்காகவே சுதந்திரக் கட்சியின் சார்பில் கோப்பாய்த் தொகுதியில் தேர்தல் களத்தில் குதித்துள்ளார் திரு. மா. துரைராசா.

அரசாங்க உத்தியோகத்தைத் துறந்து முதன்முதலாக 1965ம் ஆண்டில் சமசமாஜக்கட்சி அபேட்சகராக கோப்பாய்த் தொகுதியில் போட்டியிட்ட இவர் 1965, 1969ம் ஆண்டுகளில் கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் ஹவ்லக்டவுண் வட்டாரத்தில் சமசமாஜக் கட்சி அபேட்சகராகவும் போட்டியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரககட்சி தமிழ்-சிங்கள நல்லுறவைப் பலப்படுத்தும் எனவும் போதனாமொழி விஷயத்தில் சிறுபான்மையினருக்கு தகுந்த உரிமை வழங்கவும் தமது கட்சி ஆயத்தமாக உள்ளதெனவும் கூறுகிறார் திரு. துரைராசா.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஆட்சிமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டால் தமிழ்ப்பகுதிகள் வளம் பெறக்கூடியமுறையில் பொருளாதாரம் உயரக்கூடியவகையில் கூட்டுறவியக்கம், தொழிற்சாலைகள் அமைத்தல்மூலம் வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பளித்தல், பட்டதாரிகளின் தகைமைக்கேற்ற முறையில் உத்தியோகமும், சம்பளமும் வழங்க ஏற்பாடுசெய்தல், பனம் பொருட்களை அபிவிருத்திசெய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யக்கூடிய ஒழுங்குகளை மேற்கொள்ளுதல், கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி, உப-உணவுப் பொருட்களுக்குத் தகுந்த விலை பெற்றுக்கொடுக்கவும் முடியும் என இவர் கூறுகிறார்.

கொழும்பு, பேராதனை சர்வகலாசாலைகளுக்குச் சமமான பல்கலைக்கழகம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நிறுவ 6 மாத காலத்திற்குள் நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும், பனம்பொருள் ஆய்வு நிலையம் அமைக்கவும், மகாவலி கங்கையை இரணைமடு வரை வடக்கே திசை திருப்பவும் தமக்குச்

...றில் பறக்கவிட்டு விட்டதாலும் கட்சியின் ஆரம்பநோக்கம் கைவிடப்பட்டதாலும், தமிழ்மக்களை அவர்கள் விடுதலைப்பாதையில்இட்டுச்செல்வார்கள்என்பதில் நம்பிக்கையின்மையாலுமே தமிழரசுக் கட்சியிலிருந்து தாம் விலகியதாக இவர் கூறுகிறார்.

சமாதான ரீதியிலோ சட்டரீதியிலோ இந்நாட்டில் சமஷ்டி ஆட்சி ஏற்பட முடியாதெனவும் போராடிப் பெற வேண்டியதே சமஷ்டியெனவும் அவ்வாறு போராட்டத்தின் மூலம் பெறுவதாயின் சமஷ்டியிலும் தனித் தமிழ்நாடே சிறந்ததெனவும் கூறுகிறார் திரு, கனகசுந்தரம்.

எதிர் வரும் பொதுத்தேர்தலில் கோப்பாய் பிரதிநிதியாகத்தெரிவு செய்யப்பட்டால் அரசாங்கத்தின் உதவியுடன் வீடற்ற ஏழைகளுக்கு வீடமைப்புத்திட்டம்ஏற்படுத்தவும் வேலையிலலாப் பிரச்னையைத் தீர்க்கத்தொழிற்சாலைகளை உருவாக்கவும் முயற்சிகளெடுப்பேன் என்றும் தமிழ் மாணவர்களைப் பாதிக்கும் தற்காலக கல்வி முறையை மாற்றியமைக்கப் பாடுபடுவேன் எனவும் தமிழுக்கு இந்நாட்டில் சம அந்தஸ்துக்கிடைக்கஇறுதிவரை போராடுவேன்எனவும்இவர் உறுதியளித்துள்ளார்.

கனகநாயகம் கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் மொத்தம் 122 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டி 9 விக்கெட்டுகளை இழந்தபோது ஆக 88 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது. இதன்பின் துடுப்பெடுத்தாடிய சோடிகளான ரி. செல்வராசாவும், ஜே. கே. பிரே...

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 20-ம் திகதி [3-5-70]

## சோதிடக்கலாநிதி திருமலை க, வேலுப்பிள்ளை

**மேஷம்**- வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலைமை தென்படும். சிலர் புனைந்துரைகள் கேட்கவும் நேரிடும். உடல்நலன் பாதிக்கப்படலாம். பெண்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும்.

**ரிஷிபம்**- பிரிவின் தாக்குதல் வேதனையைத் தரும் தொழில்துறையிலும் பின்தங்கநேரிடும். சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடம்உண்டு மனத்திடம் விரும்பத்தக்கது.

**மிதுனம்**- மதிநுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதை கவருவீர்கள். பயன்தரும் பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம். அறிஞர் ஒருவரின் சந்திப்பு ஏற்படும். அறவழி நாட்டம் உண்டு.

**கடகம்**- இலக்கியரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும். எழுத்தாளர்களுக்கு புதிய படைப்புக்கான கரு கிடைக்கும். நாடகக் கலைஞர்களுக்கு நட்புகள் உண்டு. பொன்னான தினம்.

**சிம்மம்**- எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும். தொழில்புரியும் இடத்தில் தொல்லைகள் முளைக்கக்கூடும். கூர்மையான ஆயுதங்களுடன் பழகுபவர்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். மட்டமான நாள்.

**கன்னி**- அரும்பியகாதல் இன்று கரும்புபோல் சுவைக்கும். பாரீர் விரும்பிய எண்ணம்போல நல்லவை நடக்கும் காணீர்.

**துலாம்**- கழுகுப்பார்வை வட்டமிடும். கடமையில் தடைகள் ஏற்படும். நண்பர் ஒருவருடன் பகைத்துக் கொள்ள நேரிடலாம் முடிந்த வரையில் வழக்குவிவகாரங்களை இன்று தவிர்த்துக்கொள்ளவும்.

**விருட்சிகம்**- தாம்பத்தியவாழ்க்கையில் அதிக ஒற்றுமைக்கு இடமுண்டு. காதலர்களாயின் இன்பமான சூழ்நிலை தென்படும். பெற்றோர்களாயின் ஆதரவும் கிடைக்கும். தொழில்துறையிலும் வெற்றி உண்டு.

**தனுசு**- புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும். கூட்டுவியாபாரத்தால் முன்னேற்றம் உண்டு. புதுமனை கட்டுவதிலும் சிலரது கவனம் திருத்தப்படலாம். பண பலமும் உண்டு.

**மகரம்**- இரக்கசிந்தை மேலிடும். பொதுப்பணியில் ஆர்வம் காட்டுவீர்கள். பெரிய இடத்துத் தொடர்புகள் ஏற்படுவதற்கும் இடமுண்டு. சிலர் வேதாந்த விவகாரங்களில் ஈடுபடுவார்கள். கண்ணியமான தினம்.

**கும்பம்**- எதிலும் மந்தநிலை தென்படும். சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம். விவசாயிகள் வாழ்க்கையில் நஷ்டத்துக்கு இடமுண்டு. சிந்தனைகளின் சுழற்சியில் சிக்கி தவிப்பீர்கள். துக்கதினம்.

**மீனம்**- குடும்பத்தில் சிறியபூசல்கள் தலைதூக்கி மறையும். மனதில் அமைதி குன்றும். விஷமிகளின் புனைந்துரைகளால் ஆத்திரம் அதிகரிக்கும்.

...லாக நயினாதீவைச் சேர்ந்த சுரேந்திரநாதனும், குரும்பசிட்டியைச் சேர்ந்த க. பத்மநாதனும் முதன்முதலாக வேலையினின்றும் நீக்கப்பட்டார்கள்.

நாங்கள் கொடுத்த வாக்குறுதியைநம்பியகாரணத்தினால் நடுத்தெருவில் நிறுத்தப்பட்ட இவர்களை வேலையினின்றும் நீக்கிய அரசாங்க சேவை ஆணைக்குழுவின்மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தை நான் ஆட்சிமன்றத்தில் சமர்ப்பித்தேன்.

இந்தப் பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தால் ஒன்றில் இந்த இருவரும் திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பார்கள் அல்லது இவர்களைப் பற்றிய அரசாங்கத்தின் கொள்கையை நாம் தெரிந்து கொண்டிருக்கலாம். ஆனால் இந்தப்பிரேரணையை ஆமோதிக்க எந்தத் தமிழ்ப் பிரதிநிதியும் முன்வரவில்லை இதற்குப் பின்பும் தமிழரசுக் கட்சியினர் போராடப் போகிறோம் என்று கூறுவதில் எந்த விதமான அர்த்தமும் இல்லை.

தமிழ் அரசாங்க ஊழியர்களின் இந்த வாழ்வுப் பிரச்னையைப் பற்றிக் கூடவாய் திறக்காத இவர்களை தமிழினம் நன்கு இனங்கண்டு எதிர் வரும் பொதுத் தேர்தலில் சரியான தீர்ப்பை வழங்க வேண்டும்''.

புலோப்பளை கி. ச. தலைவர் திரு. ஜி. இராஜசூரியர் உட்படப்பலர் உரையாற்றினர்.

## வாகீசரின் பக்திவைராக்கியம்

சித்தங்கேணி, சனி

'பக்திவைராக்கியம் மனப் பயிற்சியின் அழுத்தத்தினால் வளர்ச்சியடைகிறது. இறைவன் மீது கொண்ட தூய அன்பானது சுடர் விட்டுப் பிரகாசிக்கும்போது இந்த உலகியற் பொருட்கள் எல்லாம் துச்சமாகக் கருதப் படுகிறது. தெளிவான உள்ளத்தில் இறைவனைப் பற்றிய சிந்தனையைத் தவிர வேறெதுவும் இல்லாத போது பயம் நீங்கித் துணிவு காணப்படுகிறது. இந்தத் துணிவு எனப்படும் பக்தி வைராக்கியம் தான் வாகீசரின், பக்திவைராக்கியமாகும்'.

இவ்வாறு சித்தங்கேணி நேருஜி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற திருநாவுக்கரசர் விழாவில் உரைநிகழ்த்திய திரு ஆ. சதாசிவம் கூறினார்.

சைவப்புலவர் திரு நா. க. தங்கரத்தினம் தலைமையில் இவ் விழா நடைபெற்றது.





பசுமையும், நீடிக்கும் சுகந்தமும் கொண்ட ரோமியா விசேஷ முறையில் வாசனையூட்டப்பட்ட டால்க்.

மேலோங்கும், அழகுருவளிக்க உடலெங்கும் முகத்திலும் ரோமியா இடுக!

சிறப்பறிய, இன்றே ஒரு டின்

**ரோமியா**

வாங்குக!

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை ரூ 2/10

ஓர் ரெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்போடியாவிலுள்ள

# வியட்காங்கியர் தலைமை முகாம் முற்றுகை

## கம்யூனிஸ்ட் நிலைகளை அழிப்பதில் யு. எஸ். தீவிரம்

## அதிபர் நிக்ஸன் கொள்கைக்கு உள்நாட்டில் பலத்த எதிர்ப்பு

நியூயோர்க், மே 2

**கம்போடியாவுக்குள் அமைந்துள்ள கம்யூனிஸ்ட் தலைமைமுகாம் முற்றுகையிடப் பட்டுள்ளது. இந்தமுகாம் மீது அமெரிக்க தென்வியட்னும் படைகள் மூர்க்கமான தாக்குதல் நடத்திக் கொண்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன.**

**கம்போடியாவுக்குள் அமெரிக்கத் துருப்புகள் நுழைந்திருப்பதற்கு அமெரிக்க ஆட்சிமன்றத்தில் (காங்கிரஸ்) உள்ளேயும் வெளியேயும் கடுமையான எதிர்ப்பு கிளம்பியிருக்கின்றது.**

**கம்போடியாவுக்கும் அமெரிக்கத்துருப்புகளை பிரவேசிக்கும்படி உத்தரவிட்டதுபற்றி ஆலோசிக்க வரும்படி அமெரிக்க செனட்சபையின் வெளிஉறவுக்கமிட்டி அதிபர் நிக்ஸனுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றது.**

கம்போடியாவுக்குள் அமெரிக்கப் படைகள் நுழைந்து அங்குள்ள வியட்கசங். வடவியட்னும் ராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கும் அதே வேளையில் அமெரிக்க ஆட்கிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் இந்தநடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பு ஏற்பட்டிருக்கின்றது.

கம்போடியாவுக்குள் பிரவேசிக்கும்படி தம்படைகளுக்கு அதிபர் நிக்ஸன் உத்தரவிட்டிருப்பது வியட்னமில் பெரும் போர் ஒன்றுக்கு வழிகோலும் என்று அமெரிக்க செனட்சபையின் இருதரப்பு செனட்டர்களும் கவலை தெரிவித்திருக்கிறார்கள்.

இதற்கிடையில் செனட்சபையின் வெளிஉறவுக் கமிட்டி, அதிபர் நிக்ஸனை அழைத்து கம்போடியாவில் அமெரிக்கப்படைகள் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் பற்றி ஆலோசிப்பதற்கு முடிவுசெய்திருக்கின்றது.

1919-ம் ஆண்டுக்குப்பின்னர் அமெரிக்க அதிபர் ஒருவரை செனட் வெளி உறவுக் கமிட்டி அழைத்து ஆலோசனை நடத்துவது இதுவே முதல் தடவை. 1919-ம் ஆண்டு அப்போது பதவியிலிருந்த அதிபர் வில்சனை செனட்சபையின் வெளி உறவுக்கமிட்டி அழைத்து இவ்வாறு விசாரணை நடத்திய "லீக் ஒஃப் நேஷன்ஸ்" என்ற உலக நாடுகள் சபையில் அமெரிக்கா சேர்வதற்கு முடிவுசெய்தது சம்பந்தமாக செனட்சபையின்வெளி உறவுக் கமிட்டி அதிபர் வில்சனை அப்பொழுது அழைத்து ஆலோசனைகள் நடத்தியது.

அதிபர் நிக்ஸன் கம்போடியாவுக்குள் அமெரிகக்த் துருப்புகள் நுழைவதற்கு உத்தரவிட்டிருப்பது சம்பந்தமாக அமெரிக்க ஆட்சிமன்றத்தின் நான்கு கமிட்டிகளுடன் ஆலோசனைகள் நடத்தவிருக்கிறார். முதலில் அவர் செனட்சபையின் வெளி உறவுக்கமிட்டியை சந்திப்பார் என்றும் பின்னர் ராணுவ சேவைக்கமிட்டியையும் மற்றக்கமிட்டிகளையும் சந்திப்பார் என்று தெரிகின்றது.

## சிகானுக் - மா-சே-துங் அவசர ஆலோசனை

கம்போடியாவுக்குள் அமெரிக்கத்துருப்புகள பிரவேசித்துத்தாக்குதல்களை ஆரம்பித்திருப்பதாக செய்திகள் வெளிவந்ததைத் தொடர்ந்து சீன அதிபர் மா-சே-துங் கம்போடியாவின் முன்னாள் தலைவர் இளவரசர் நொரடொம்சிகானுக்கை சந்தித்து ஆலோசனைகள் நடத்தியுள்ளார். இருவரும் நடத்திய பேச்சுகளின் விபரம் ஒன்றும் கிடைக்கவில்லை இந்தப் பேச்சுகளின்போது சிகானுக்குடன் சென்றிருக்கும் அவரது அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அமெரிக்கத் துருப்புகள் கம்போடியாவுக்குள் பிரவேசித்திருப்பது சம்பந்தமாக சீன அரசு உடனடியாக கருத்து எதுவும் வெளியிடவில்லை ஆனல் விரைவில் அமெரிக்காவை படுமோசமாக கண்டிக்கும் அறிக்கைகள் வெளிவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தோ சீன சம்பந்தமாக கடந்த மாதம் 28ம் திகதி சீன விடுத்த ஓர் அறிக்கையில் அமெரிக்காவைக கண்டித்திருக்கின்றது. கம்போடியாவுக்குள் உங்களின் ஆக்கிரமிப்புக்கரங்களை நீட்டிக் கொண்டது மட்டுமின்றி வியட்னும், லாவோஸ் ஆகிய நாடுகளிலும் ஆக்கிரமிப்பை விஸ்தரித்துக்கொண்டு வருகிறீர்கள் இதனல் ஏற்படும் விளைவுகளுக்கு நீங்களே பொறுப்பேற்க வேண்டும் என்று சீன குறிப்பிட்டிருக்கின்றது.

0 0 0

## அதிபர் நிக்ஸனின் நோக்கம் என்ன?

கம்போடியாவுக்குள் அமெரிக்க துருப்புகளைப் பிரவேசிக்கும்படி அதிபர் நிக்ஸன் உத்தரவிட்டிருப்பதின் முக்கிய நோக்கம் பாரிஸில் நடைபெறும் வியட்னும் அமைதிப்பேச்சுக்களில் ஒரு தீர்க்கமான முடிவுக்குவரும்படி வியட்காங்கியரையும் வடவியட்னுமியரையும்நிர்ப்பந்திப்பதாய் இருக்கும் என்று கருதப்படுகின்றது.

அமெரிக்க படைகளும், தென்வியட்னும் படைகளும் கம்போடியாவில் இறங்கி வியட்காங்கியரின் முகாம்கள்மீது கூட்டாக ஆரம்பித்துள்ள் தாக்குதல்கள் ஆறு வாரகாலம் அல்லது இரண்டு மாதகாலம் வரையில் தான் நீடிக்கும் என்றும் இதற்குள் கம்போடியாவில் நிலைகொண்டிருக்கும் கம்யூனிஸ்ட் முகாம்களையும் வெடிமருந்து தொழிற்சாலைகளையும் அழித்துவிட முடியும் என்றும், இதனல் அடுத்துவரும் மழைகாலத்தில் அழிக்கப்பட்ட முகாம்களையும் திருப்பி அமைத்துக் கொள்வது கஷ்டமாய் இருக்கும் என்றும் அமெரிக்கர்கள் கருதுவதாகத் தெரிகின்றது. இதன் காரணமாக கம்யூனிஸ்ட் கட்டாயமாக சமாதானத்திற்கு வரவேண்டியிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பசுவதையை எதிர்த்து

## பூரிசாமியார் மீண்டும் போராட்டம் நடத்துவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளைமாட்டுச் சின்னம்: கக்கன் மீண்டும் வழக்கு

சென்னை, மே. 2

'குமரிமாவட்டம் குளச்சல் தொகுதியில், சிண்டிகேட் வேட்பாளருக்கு காளைமாட்டு சின்னம் கொடுக்கப் படவேண்டும்' என்று தமிழ் நாடு சிண்டிகேட் காங்கிரஸ் தலைவர் திரு. கக்கன் தொடர்ந்த வழககில், 'குளச்சல் தேர்தல் வேலைகள் தொடங்கி விட்டதால், இந்தக் கட்டத்தில் ஹைகோர்ட் தலையிடுவதற்கில்லை' எனக் கூறி நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்துவிட்டது.

மீண்டும், இப்போது திரு. கக்கன், நெல்லை மாவட்ட சேரன்மாதேவி தொகுதி இடைத் தேர்தலில், சிண்டிகேட் காங்கிரஸ் வேட்பாளருக்கு, காளை மாட்டு சின்னம் ஒதுக்க வேண்டும் எனக் கேட்டு வழக்குத் தொடர்ந்துள்ளார்.

திரு. கக்கனல் தொடரப்பட்ட இந்த வழக்கு 'ரிட்' மனுவில் கூறப்பட்டிருப்பதாவது: 'ஏற்கனவே குளச்சல் தொகுதியில் ஸ்தாபன காங்கிரஸ் வேட்பாளருக்கு காளைமாட்டு சின்னம் ஒதுக்க வேண்டும் என்று மனு செய்தோம். ஆனல் தேர்தல் வேலைகள் தொடங்கி விட்டன என்று கூறி தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. ஆகவே இப்போது முன்கூட்டியே 'ரிட்' போடுகிறோம்'.

இந்த மனுவை நீதிபதி திரு. ஏ. அழகிரிசாமி விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார் இம்மாதம் 5ம் திகதி இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆதிமூலம் (சுதந்திரா) மரணம் அடைந்ததால் இம் மாதம் இடைத் தேர்தல் நடைபெற இருக்கிறது. சிண்டிகேட் காங்கிரஸ் வேட்பாளருடன் இத் தொகுதியில் தி மு. க. செயலாளர் திரு. இரத்தினவடிவேல் (தி. மு. க) போட்டியிடுகின்றார்.

## தமிழரசுக்கட்சியின் சாதனைகள் பற்றி முன்னாள் கோப்பாய் எம். பி.

கோப்பாய், சனி

"இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சிமன்றத்தின் உள்ளும் புறமும் சமூக, பொருளாதார, அரசியலுக்காகத்தொடர்ந்து போராடிவரும் ஒரு இயக்கமாகும். 60-ம் ஆண்டு தமிழ்பேசும் மக்களின் இழந்த உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கவே ஒப்பந்தத்துடன் அன்றைய அரசாங்கத்தை ஆதரித்தோம்."

இவ்வாறு கோப்பாயில் நடைபெற்ற தமிழரசுக் கட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கோப்பாய் முன்னுள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை கூறினர்.

இக்கூட்டம் திரு. ஆ. தம்பு தலைமையில் நடைபெற்றது. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

'உயர்ந்த சிந்தனை, சிறந்த தியாகம், நிறைந்த சுபிட்சம் என்பவை எமது கட்சியின் அரசியல்தத்துவங்களாகும். தமிழ்மக்களைச் சாதி, சமய, பிரதேச வேறுபாடுகளினின்றும் ஒற்றுமைப்படுத்தி சுதந்திரப் பாதையில் வழி நடத்தி வருவது எமது கட்சியின் சிறந்த சாதனையாகும். போதனமொழிப் பிரச்னை, அரசாங்க ஊழியர் பிரச்னை, மலையகத் தமிழ் மக்கள் பிரச்னைகள் தீர்க்கப்பட்டன. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் தடுக்கப்பட்டது, தமிழ் மொழிக்கு விசேஷ உரிமை பெறச்செய்தது ஆதியன எமது கட்சியின் இடைவிடாப் போராட்டத்தினுல் பெற்ற உரிமைகளாகும். மாவட்டசபையைப் பொறுத்த வரையில் சமஷ்டி அரசியல் அமைப்பின் முதற்படியான அம்மசோதாவை யு. என். பி. அரசாங்கம் கொள்கை ரீதியிலாவது ஏற்றுக்கொண்டுள்ளது.

இதே நேரத்தில் இதர தமிழ்க் கட்சியினர் பல்கலைக்கழகப் பிரச்னையைத் தமிழ் மக்கள் முன் வைத்து அவர்களை சாதிரீதியில், சமய ரீதியில், பிரதேச அடிப்படையில் கூறு போட முயன்று வருகிறார்கள். இதுகுறித்து தமிழ் மக்கள் விழிப்புடனிருக்க வேண்டும்.

0 0 0

## 'இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் அளித்தாலென்ன

உடுவில், சனி

'வயதான தலைவர்களும்

## "தேவைகளை நிறைவேற்றுவேன்; வேலைவாய்ப்பு அளிப்பேன்"

புங்குடுதீவு, சனி

"தீவுப்பகுதியின் அவசிய தேவைகளை நிறைவேற்றவும் ... பெரிதும் கஷ்டப்படுகின்றனர். வயிற்றுப் பிரச்னை தீர்ந்தால் மொழிப் பிரச்னை

ரிக்க செனட்சபையின் இருதரப்பு செனட்டர்களும் கவலை தெரிவித்திருக்கிறார்கள். இதற்கிடையில் செனட் உறவுக்கமிட்டி அழைத்து இவ்வாறு விசாரணை நடத்திய ''லீக் ஒஃப் நேஷன்ஸ்'' என்ற உலக நாடுகள் சபையில் அமெரிக்கா சேர்வதற்கு பார் ... என்றும் பின்னர் ராணுவ சேவைக்கமிட்டியையும் மற்றக்கமிட்டிகளையும் சந்திப்பார் என்று தெரிகின்றது.

# ''சரியென்று நம்பியதை செயல்படுத்தினேன்''

கம்போடியாவுக்குள் சென்று கம்யூனிஸ்ட் நிலைகள் மீது அமெரிக்கப்படைகளைத் தாக்குதல் நடத்தும்படி கட்டளையிட்டதற்கு எதிராக உள்நாட்டிலும் வெளியிலும் பலத்த எதிர்ப்புகள் வளர்த்துக்கொண்டிருக்கும் அதேவேளையில் அதிபர் நிக்ஸன் நேற்று தமது உயர்தர ராணுவ அதிகாரிகளுடன் ஆலோசனைகள் நடத்தினர். ''நான் சரியென்று நம்பியதைச் செய்தேன்'' என்று அதிபர் பின்னர் கூறினர். திட்டமிட்டபடி தமது படைகள் தாக்குதல்களை நடத்திவருவதாக அதிபர் நிக்ஸன் கூறினர்.

# பல்கலைக்கழகத்தில் குழப்பம்

கம்போடியாவுக்குள் புகுந்துள்ள அமெரிக்கா- தென் வியட்னும் படைகள் வெகுதூரம்வரையில் கம்யூனிஸ்ட் நிலைகளை நோக்கி முன்னேறியிருப்பதாக முதலில் வந்த செய்திகள் கூறின. ஆனல் பின்னர்வந்த செய்திகளின்படி கம்போடியாவுக்குள் இருக்கும் வியட்காங்கியரின் தலைமை முகாமை சுமார் 8000 அமெரிக்க தென்வியட்னும் படைகள் சூழ்ந்து கொண்டுள்ளதாக கூறின.

இந்தமுகாமிலிருந்தே தென் வியட்னும் மீதான எல்லா போர் நடவடிக்கைகளையும் வியட்காங்கியர்நடத்திவருகிருர்களாம் இந்தமுகாமை முற்றுகஅழித்துவிடும்படி அதிபர் நிக்ஸன் உத்தரவிட்டிருக்கிருர். இந்தமுகாம் அழிக்கப்பட்டுவிட்டால் தென் வியட்னுமிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறுவது இலகுவாக இருக்குமாம்.

## கடும் விமானத் தாக்குதல்

வியட்காங் நிலைகள் மீது சுமார் 150 தடவைகள் நேற்று விமானத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும், அமெரிக்கத் துருப்புகள் சுமார் 100 வியட்காங்கியரைக் கொன்ருழித்ததாகவும் அறிவித்தனர். அமெரிக்க தரப்பில் 6 வீரர்கள் காயமடைந்தார்கள்என்றும் இரு ஹெலிகொப்டர்கள் அழிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## அமெரிக்காவில் குழப்பம்

கம்போடியாவுக்குள் அமெரிக்கத்துருப்புகள் பிரவேசித்திருப்பதற்காக அமெரிக்காவில் பல இடங்களில் எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. வாஷிங்டன் நகருக்கருகிலுள்ள மேரிலன்ட் பல்கலைக் கழகத்தில் நேற்று ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டார்கள். மேசை நாற்காலிகளை உடைத்தும், கற்களை எறிந்தும் அவர்கள் வன்முறைகளில் இறங்கினுர்கள். பல்கலைக் கழக வட்டாரத்துக்குள் பொலிசார் பிரவேசித்து மாணவர்களின் குழப்பத்தை அடக்க கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசினுர்கள்.

## கனடா பிரிட்டன் கவலை

இந்தோ சீனவில் இப்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து கனடாவும் பிரிட்டனும் கவலை தெரிவித்துள்ளன. லண்டனில் நேற்று பிரிட்டிஷ் வெளிஉறவு அமைச்சர் திரு. ஸ்டுவர்ட் சோவியத் தூதுவருடன் ஆலோசனைகள் நடத்தினுர். கம்போடியா நிலைமைகுறித்து ஆலோசிக்க மீண்டும் சர்வதேச மாநாடொன்றை நடத்தவேண்டும்என்றுபிரிட்டன் கருத்து வெளியிட்டிருக்கின்றது. கம்போடியாவில் அமெரிக்கா தலையிட்டிருப்பது பிரச்னையை மேலும் குழப்பிவிடுவதாகவிருக்கும் என்று இந்தோனேஷிய வெளிஉறவு அமைச்சர் டாக்டர் ஆதம்மாலிக் கருத்து தெரிவித்திருக்கிருர்.

கம்போடியாவுக்குள் அமெரிக்கத்துருப்புள் நுழைவதற்குமுன் தமது அரசாங்கத்துக்கு அறிவிக்கப்படவில்லையென்று அந்த நாட்டின் புதிய தலைவர் ஜெனரல் நொஸ்நொல் கூறியிருக்கிருர். கம்போடியாவின் நடுநிலைமைக் கொள்கையை அமெரிக்க அதிபர் மதிப்பர். என்றுநம்புவதாகவும் ஜெனரல் நொஸ்நொல் கூறினுர்.

அமெரிக்க நடவடிக்கை பற்றி முன்கூட்டியே தகவல் அனுபபப்பட்டதென்றும் ஆனல் போக்குவரத்து சங்கடங்களின் காரணமாக அது போய்க்கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டிருக்கவேண்டும் என்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

— —

## கடலில் மூழ்கும் ஜெர்மன் நகரம்

ஹாம்பர்க் மே.2

இன்னும் 1500 ஆண்டுகளில் ஹாம்பர்க் நகரம்கடலில் மூழ்கி விடுமொன்றும் மைக்கேல் என்கின்ற ஸ்தூபியின் உயரம் மட்டுமே கடலுக்கு மேல்தெரியுமென்றும் மேற்குஜெர்மன் விஞ்ஞானிகள் 1850 ஆண்டிலிருந்து பின்பற்றப்பட்டுவந்த சில கணக்குகளை ஆதாரமாகக் கொண்டு கூறுகின்றனர் வடகடலை ஒட்டிய கடற்கரைப்பகுதிகளில் சென்ற 100 ஆண்டுகளில்60 சென்டிமீட்டர்கள் கடலில் மூழ்கியிருக்கின்றதாம். இந்தக்கணக்கில் ஹம்பர்க் அமுங்கிவரும்பட்சத்தில் இன்னும் 3500 ஆண்டில் நகரமே மூழ்கிவிடும் என்றும் சொல்லப்படுகிறது. பிரிட்டிஷ் விஞ்ஞானிகளும் லண்டனில் இதே முடிவுக்குதான் வந்துள்ளனர். வடஜெர்மனிதான் அதிகமாக அமுந்திவருவதாகவும் தெரிகின்றது தண்ணீர்மட்டம் சென்றபல ஆண்டுகளின் பல சென்டிமீட்டர்கள் அதிகரித்துள்ளது.

பசுவதையை எதிர்த்து

# பூரிசாமியார் மீண்டும் போராட்டம் நடத்துவார்

பாட்ன, மே 2

இம்மாதம் 8ம் திகதிமுதல் பசுவதையைத் தடை செய்யக் கோரி இந்திய ஆட்சி மன்றத்தின் முன்பாக மறியல் நடத்தப் போவதாக பூரி சங்கராச்சாரிய சுவாமிகள் அறிவித்துள்ளார்.

பூரிமடாதிபதி சங்காரச்சாரியார் முன்பொருமுறை பசுவதையை எதிர்த்து உண்ணவிரதம் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

''ஆட்சி மன்றம் நடைபெறும் போது ஆட்சி மன்றம் முன்பாகவும், ஆட்சி மன்றம் நடைபெருத நாட்களில் டில்லி அரசாங்க உள்நாட்டு இலாக மந்திரியின் வீட்டுக்கு முன்பாகவும் மறியல் நடத்துவேன்'' என்று கூறியுள்ளார்.

## ஏ. வி. எம். ராஜனுக்கு கலைத்திலகம் பட்டம்

தஞ்சை மே 2

கடந்த வியாழக்கிமை ஏ. வி. எம். ராஜனைப் பாரட்டி தஞ்சை கலை இலக்கிய அன்பர்களால் தஞ்சை அரண்மனை கலைக்கூடத்தில் ஒரு பாராட்டுவிழா நடாத்தப் பெற்ரது.

இவ்விழாவில் திரு, ஏ.வி எம். ராஜனுக்கு ''கலைத்திலகம்'' என்ற பட்டம் அளிக்கப்பட்டு பொன்னுடையும் போர்த்தப்பட்டது இவ்விழாவில் ஏ. வி. எம். ராஜனின் மனைவி புஸ்டலதாவும் கலந்து கொண்டார்.

## தீயில் வெந்து மரணம்

மதுராந்தகம்,மே.2

திருமண ஊர்வலத்தின் போது தீப்பந்தம் மூலம் வேடிக்கை செய்த ஒருவர் தீயினுல் வெந்து மடிந்த பரிதாபகரமான சம்பவம் ஒன்று மதுராந்தகத்தில் நடைபெற்றுள்ளது.

வாயில் பெற்ரேலை ஊற்றிய போது இவருடைய உடலெங்கும்பெற்ரேல் பரவிய தாகவும்,இவர் இதைப் பொருட்படுத்தாது பெற்ரேலை தீப்பந்தத்தில் ஊதிய போது அவருடைய உடலில் தீபிடித்ததாகவும், அவர் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மரணமானதாகவும் தெரிவிக்கப் பட்டது.

— —

## இலங்கைப் பெண் பிரிட்டன் செல்கிருர்

லண்டன்,மே.2

பிரிட்டனில் நடைபெறவிருக்கும் உலக பெண் சாரணர் இயக்கத்தின் வைரவிழா கொண்டாட்டங்களில் இலங்கைப் பெண்சாரணரில் ஒருவரான செல்வி. காந்தி பெர்னுன்டோ கலந்து கொள்ளார். 'டெயிலி டெலிகிராப்'என்ற பிரிட்டிஷ் தினசரி ஒன்றின் விருந்திளராகவே இவர் பிரிட்டன் செல்கிருர். செல்வி. பெர்னுன்டோவின் விமான செலவுகளையும்,தங்கும் வசதிகளையும் இப் பத்திரிகை பொறுப்பேற்கும்.

ஜூலை மாத இறுதியில் பிரிட்டனுக்கு அழைக்கப்பட்டிருக்கும் அவர், செப்டம்பர் மாத முதல் வாரத்தில் பர்மிங்ஹாம் நகரில் நடைபெற விருக்கும் மேற்படி சாரண விழாவில் கலந்து கொள்ளார்.

## சந்தர்ப்பம் அளித்தாலென்ன

உடுவில். சனி

'வயதான தலைவர்களும் அவர்களது அங்கத்தவர்களும் ஏன் இளைஞர்களுக்கு தமது பதவியை விட்டுக் கொடுக்கக்கூடாது.' என உடுவில் தொகுதி சுயேச்சை வேட்பாளர் திரு. குமாரசாமி விநோதன் உடுவில் வெட்டுக்கட்டைப் பிள்ளையார் கோவிலுக்கண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கேட்டார்.

இளைப்பாறிய ஆசிரியர் திரு. லோட்டன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. விநோதன் மேலும் பேசியதாவது:

நான் தேர்தலில் வெற்றி பெற்ருல் நிச்சயமாக சில வருடங்களில் எனது பதவியை ஓர் இளைஞனுக்கு விட்டுக் கொடுப்பேன். தமிழரசாரும் காங்கிரசாரும் தமிழ் இளைஞர்களை ஏமாற்றி தமது கருமங்களிலேயே கண்ணுக இருந்துள்ளார்கள். இளைஞர்களை வாழவைக்க முயலவில்லை. இதனுல் எமது சமூகம் பல பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளது.

திருவாளர்கள் வே. மணிராசா, க. பாலசுப்பிரமணியம், தா. சண்முகநாதன் சி. சுசிதர், பண்டிதர் இரா. சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர்.

## வேலைவாய்ப்பு அளிப்பேன்''

புங்குடுதீவு. சனி

''தீவுப்பகுதியின் அவசிய தேவைகளைநிறைவேற்றவும் முக்கியமாக எமது தொகுதியிலுள்ள வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கவும் என்னை ஆட்சி மன்றத்திற்கு அனுப்பி வையுங்கள்'' என தீவுத் தொகுதி சர்வோதய அரசியல் முன்னணி வேட்பாளர் திரு. ப. கதிரவேலு சரவணையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்: அவர் மேலும் பேசியதாவது:

''இதுவரை தமிழ்க்கட்சிகளெதுவும் வேலையற்ருேர் விஷயத்தில் பாராமுகமாகவே இருந்துள்ளன. வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ள இந்நாளில் வேலைவாய்ப்பில்லாததால் வருமானமெதுவுமின்றி மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். வயிற்றுப் பிரச்னை தீர்ந்தால் மொழிப் பிரச்னை தீரும்.

''தமிழரசுக்கட்சி 1965-ம் ஆண்டு சிங்களத்தை அரசகருமமொழியாக ஏற்றுக் கொண்டுவிட்டு இன்று தமிழுக்கு சம உரிமை பெறுவோம் என்று வீரம் பேசுகின்றது இதுவரை தமிழருக்காக இவர்கள் எடுத்த எந்தக்காரியம் வெற்றியளித்துள்ளது.

இவர்கள் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவில்லை தொழிற்சாலைகளை ஏற்படுத்தவில்லை. பூநகரிப் பாலத்தையாவது போட்டுமுக்கவில்லை''.

திரு. க. பத்மநாதன் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

# நயினுதீவுக் கலைவிழா

அல்லைப்பிட்டி, சனி

நயினுதீவு மணிபல்லவ கலாமன்றத்தினரின் எட்டாவது ஆண்டு கலைவிழா நயினுதீவு மத்திய சனசமூக நிலைய முன்றலில் இருநாட்கள் நடைபெற்றது.

சைவப்புலவர் திரு. நா. விசுவலிங்கம் தலைமையில் ஆரம்பமான முதலாம் நாள் விழாவில் ஆசிரியர் திரு. சாந்தலிங்கம் கலாநிதி எஸ். பத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர் அடுத்து வித்துவான் சி. குமாரசாமி தலைமையில் ஆரம்பமான கருத்தரங்கில் திருவாளர்கள் யோகநாதன் நா. க. குமாரசூரியர் க. மகாதேவா, மு. பரமேஸ்வரன் ஆகியோரும் செல்விகள் மு. விசாலாட்சி, இ. மங்கையர்க்கரசி ஆகியோரும் கலந்து கொண்டனர். முடிவில் மங்கள இசைநிகழ்த்திய எஸ். ஆர். கோவிந்தசாமி குழுவினருக்கு நயினை கிராமசபைத் தலைவர் திரு. சி. க. தம்பையாவால் தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

திரு. வி. இராமச்சந்திரன் தலைமையில் ஆரப்பமான இரண்டாம் நாள் விழாவில் திருவாளர்கள் சபர் ஆனந்தன் இ. அம்பிகைபாகன் ஆகியோர்கலந்து கொண்டு உரையாற்றினர் வித்துவான் க குகதாசன் தலைமையில் கவிஞர்கள் க. சந்திரன் இ. இ. அப்பாத்துரை, நா. க. சண்முகநாதபிள்ளை ஆகியோர்கலத்து கொண்ட கவியரங்கும் விழாவில் இடம் பெற்றது.

இவ்விருநாட்களில் நயினை நாகபூஷணி கனிஷ்ட வித்தியாலய மாணவிகளது நடனம், மெல்லிசைக் கச்சேரிகளும் நயினை முத்தமிழ் சங்கத்தினரின் பாதுகாபட்டாபிஷேகம் மணிபல்லவகலாமன்றத்தினரின் 'இதுநடக்குமா?' 'மணற் கோட்டை' நயினை ஆசிரியர்களின் தியாகிஆகிய நாடகங்களும் விழாவில் இடம் பெற்றன.

# இஸ்ரேல் கூற்று வெறும் பிரசாரம்

# சோவியத் உதவியில் இரகசியம்ஒன்றுமில்லை

—அதிபர் நாஸர்

கெய்ரோ, மே 2

இஸ்ரேலியர் கைப்பற்றியுள்ள அரபுப்பிரதேசங்களிலிருந்து வெளியேறும்படி உத்தரவிடுமாறு ஐக்கிய அரபுக்குடியாசு அதிபர் நாஸர் அமெரிக்காவைக் கேட்டுக்கொண்டார்.

நேற்றுநடைபெற்ற பிரமாண்டமானதொரு மே தின விழாவில் அதிபர் நாஸர் உரை நிகழ்த்தினுர். இஸ்ரேலியருக்கு அமெரிக்கா கொடுத்துவரும் அரசியல், பொருளாதார இராணுவ உதவிகள் யாவற்றையும் நிறுத்தும்படியும் அமெரிக்காவை அதிபர் நாஸர் வற்புறுத்தினுர்.

எகிப்திய ராணுவத்தில் சோவியத் விமானிகள் பணிபுரிவதாக இஸ்ரேலியர் கூறியிருப்பதை நாஸர் வெறும் பிரசாரம் என்று கண்டித்தார். அரபுக்குடியரசுக்கு சோவியத யூனியன் உதவிகள் அளித்துவருவது ஒன்றும் இரகசியமல்லவென்று அவர் குறிப்பிட்டார்.

இஸ்ரேலியர் அரபுக்குடியரசின் பாடசாலைகள் ராணுவ நிலைகள், பொதுமக்கள் வாழும் நகரங்கள் ஆகியவற்றின்மீது நடத்திவரும் தாக்குதல்களினின்றும் பாதுகாத்துக்கொள்வதற்காக சோவியத் யூனியன் உதவி வழங்கிவருகின்றது.

இஸ்ரேலியர் இந்தத்தாக்குதல்களை நிறுத்திவிடடால் நாங்களும் இதேபோல் தாக்குதல்களை நடத்தவேண்டிவரும் என்ருர் அதிபர் நாஸர்.

நாங்கள் போர் நிறுத்தம் செய்வதாயின் இஸ்ரேலியர் கைப்பற்றியது எமது தேசத்திலிருந்து வெளியேறுவதற்கான திகதியை அறியத்தரவேண்டும் என்ருர் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

ஒளியினுல் ஒளிதான்வரும், இருள் வராது. கண்ணியமான நோக்கத்துக்காக கண்ணியத்துடன் நடந்துகொண்டால் இருமடங்கு பலன் கிடைக்கும்,

— மகாத்மாகாந்தி.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "ELLANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் சித்திரை மாதம் 20-ந் திகதி (3-5-70)

## பெண்களின் பிரச்னை

ஈழத்திலே படித்த பெண்களில் பலர் விவாகத்துக்காகவோ அல்லது ஏதாவது தொழிலுக்காகவோ காதத்துக்கொண்டிருக்கிருர்கள். அவர்கள் தங்கள் அறிவாற்றல்களையும் திறமையையும் பயன்படுத்த வாய்ப்புக் கிடைக்காமல் சோம்பி இருந்து பொக்கம் பேசி பொழுதைக் கழிக்கவேண்டிய அவலநிலை இருக்கிறதென்பது பகிரங்க ரகசியம். பெண்ணுக ஒருவர் பிறந்ததுமே அவரது விவாகத்தைப் பற்றித்தான் விசாரம் ஆரம்பமாகிறது. பெண்களைப் படிக்கவைக்கிருர்கள் பெற்றேரர்கள் படித்துப் பட்டமும் பெற்றபின் அவர்களது விவாகத்துக்காகப் பெற்றேரர்கள் படாதபாடுபடுகின்றனர். பட்டதாரிப் பெண்களுக்கு வரன் தேடுவது சுலபமன்று. பெண்ணைவிட அதிகம் படித்தவராகவும், பெரிய உத்தியோகம் வகிப்பவராகவும் மாப்பிள்ளை இருக்கவேண்டும். அப்பேர்ப்பட்ட மாப்பிள்ளை கிடைப்பது சுலபமன்று கிடைத்தாலும் சீதனம், 'டொனேஷன்' முதலியவை ரொக்கமாக கேட்கப்படுகின்றன. போட்டா போட்டிகளால் இந்தத் தொகை அதிகரித்து, நமது பெண்மையை அவமதிக்கும் அளவுக்கு சீதனமுறை கேடுகெட்டு, நமது சமூகத்தின் பெரும் பிரச்னையாக்கி பல பெண்களுக்கு மட்டுமன்றி ஆண்களுக்கும் விவாகமாக முடியாமல் தவிக்கும்படியானநிலையை ஏற்படுத்தியுள்ளது

இதற்கு விமோசனமென்ன? இதைக்குறித்து பலர் பலமுறை வன்மையாகக் கண்டித்திருப்பினும் பிரச்னை குறைவதற்குப் பதில் வளர்ந்துகொண்டே போகின்றது. படித்த பெண்களுக்குத் தக்கவேலையும் கிடைப்பது கடினமையாகி, அவர்கள் வீட்டிலே காலத்தை

யாழ்ப்பாண சைவமங்கையர் சபைக்குப் புத்துயிர் ஊட்டியுள்ளார் அச்சபையின் ஆதரவிலே, சைவப்பெண்களிடையே தொண்டில் ஒரு புதிய உற்சாகத்தை ஊட்டுவதற்காக சில துறைகளிலே அச்சபையின் ஆதரவில் பயிற்சிவகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. திறமையும் அனுபவமும்மிக்க சிலர் முன்வந்து பெண்களுக்குச் சில தொழில்களில் பயிற்சி அளித்துவருவது பெரிதும் வரவேற்கத்தக்கது.

இவ் வகுப்புகளிலே, வீட்டில் ஒன்றும் செய்யாமல், வெறுமனே சோம்பிஇருந்து காலத்தை அவமே கழிக்கும் பெண்மணிகள் சேர்ந்து, தொண்டுக்கான பயிற்சிகளைப் பெற்று தங்களுக்கும் மற்ற பெண்களுக்கும் பயனுள்ள வகையில் தொண்டாற்ற முன்வரவேண்டுமென்று திருமதி ரத்னு நவரத்தினமவர்கள் உருக்கமாக வேண்டுகின்ருர் இவ் வேண்டுகோள் வீண்போக முடியாது. மேற்குறித்த சபையிலே பல பெண்மணிகளும் அங்கத்தவராகச் சேர்ந்து, நல்ல தொண்டாற்றுவதற்கான பயிற்சியையும் வாய்ப்பையும் பெற முன்வருவரென்பதே நமது நம்பிக்கை, பெண்களின் பிரச்னைகளை பெண்கள் தீர்த்துக்கொள்ள வேண்டும். அரசியல்கட்சிகளோ, மற்றவர்களோ அவற்றைத் தீர்க்க மாட்டார்கள். தீர்க்கவும் முடியாது. தொழிற் பயிற்சிகளை அளிப்பதுடன் நிற்காமல், பல வீடுகளுக்கும் சென்று அக்குடும்பத்திலுள்ள பெண்களுக்குக் கூடுமான உதவிகளை இலவசமாகச்செய்யக் கூடிய சமூகசேவை தொண்டர்களுக்கும் இச்சபை ஏற்பாடு செய்வது நல்லது. பிரிட்டனிலே பல சமூக சேவா ஸ்தாபனங்கள், வீடு வீடாகச் சென்று உதவக்

# "இரகசிய ஒப்பந்தங்களால் மக்களின் பிரச்னை தீராது"

## கூட்டுமேதினக் கூட்டத்தில் திரு. இரத்னவீரா பேச்சு

### சிறிமாமீது தமிழர் நம்பிக்கைவைக்க வேண்டுமென்கிறார்

மல்லாகம், சனி

''முதலாளித்துவ அமைப்பின்கீழ் இந்த நாட்டில் மக்களின் சகல அடிப்படைப் பிரச்னைகளுக்கும் தீர்வுகாண முடியாது. வறுமை, வேலையில்லாப் பிரச்னை ஆகியவை சோஷலிச நாடுகளில் நிலவுவதை நாம் காணவில்லை. சோஷலிச சமூக அமைப்பு ஒன்றினை நிறுவுவதன் மூலம் சகல பிரச்னைகளுக்கும் தீர்வு காணலாம்.'' இவ்வாறு திரு. எச். ஜி. எஸ். ரத்னவீரா கீரிமலை கடற்கரையில் நடைபெற்ற கூட்டு மே தின விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். திரு. இ. நரசிங்கம் தலைமைவகித்தார்.

திரு. ரத்னவீரா சிங்கள, ஆங்கில மொழிகளில் பேசினார். அவர் மேலும் கூறியதாவது:

''முன்னர் யார் ஆட்சியைக் கைப்பற்றினாலும் நமக்கு ஒன்றுதான் என்ற எண்ணம் மக்கள் மனதில் நிலவியது. தற்போது வாழ்க்கையில், குடும்பத்தில் அரசியல் கலப்புப் பெற்றுவிட்டதால் பதவியை யார் கையில் ஒப்படைப்பதென மக்கள் கவனமாகச் சிந்திக்கின்றனர். நமது நாட்டில் பெண்கள் அரசியலில் தீவிர கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர். கடந்த தேர்தலில் யு. என். பி. 21அம் சத்திட்டத்தை மக்கள் முன்னிலையில் வைத்துப்போட்டியிட்டது. தேர்தலில் தமது கட்சிக்குப் பெரும்பான்மை கிடைக்காவிடில் எவருடனும் கூட்டுச் சேரமாட்டோமென டட்லி அதில் ஓரம்சமாகக் குறிப்பிட்டிருந்தார். தேர்தலின் பின்னர் நடந்தது என்ன?

#### வட்டமேசை மாநாடு நல்லதே

மக்கள் அங்கீகாரமின்றி பதவி ஆசைகொண்டு யு. என். பி. சமஷ்டிக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தது. மொழிப் பிரச்னை சம்பந்தமாக வட்டமேசை மாநாடு வைத்து உத்தியோக மொழியாகச் சகலரையும் சிங்களத்தை ஏற்கவைப்பேன் எனத் தெரிவித்தது. வட்ட

மக்களின் வயிற்றிலடித்துள்ளது யு. என். பி. மக்கள் வாழ்க்கைத்தரம் படுமோசமாகி வேலையற்றோர் தொகை யு. என். பி. ஆட்சிக்காலத்தில் மேலும் அதிகரித்துள்ளது. இப்படியாக சாதாரண மக்களின் கஷ்டங்களுக்கு யு. என். பி. யுடன் தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளும் உடந்தையாக இருந்துவந்துள்ளன.

#### இரண்டு வகை மக்கள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டும் தேர்தலில் போட்டியிடும் சமஷ்டிக் கட்சி தனித்து அரசாங்கத்தை அமைக்கமுடியாது. நாட்டில் இருவகை மக்களே வாழுகின்றனர். சுரண்டி, நசுக்கி வாழ்வோர் கூட்டம் ஒன்ருகவும், சுரண்டப்படும் நசுக்கப்படும் ஒடுக்கப்பட்ட உரிமை இழந்த மக்கள் கூட்டம் ஒன்ருகவும் இருக்கின்றது. எதிர்வரும் தேர்தல் இந்த இருவகைக் கூட்டத்தாருக்கும் இடையே நடக்கும் போராட்டமாக விளங்குகிறது. தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் எப்போதும் யு என்: பி.யுடன் சேர்ந்து மேல்தட்டு வகையினரான சுரண்டும் கூட்டத்தையே ஆதரிப்பர். எனவே சாதாரண விவசாய, தொழிலாள மக்கள் ஒன்றுசேர்ந்து இக்கட்சிகளை வீழ்த்தவேண்டும். திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சிங்கள மக்களுடன் ஒன்றுசேர்ந்து ஐக்கியமாகத் தமிழர் பிரச்னையை தீர்க்கவேண்டும் என்கிருர். இவர் கூறுவது சிங்கள முதலாளித்துவ சக்திகளுடன் ஐக்கியப்படுவதையே. சாதாரண சிங்கள தமிழ்மக்களிடையே உறவை பரஸ்பரம் ஏற்படுத்த கூட்டுமுன்னணியினராலேயே முடியும்.

#### ஸ்ரீமாவை நம்புங்கள்

ஸ்ரீமாவோ முன்வைத்துள்ள பொதுக் கொள்கைத் திட்டம் சிறுபான்மை இனத்தவருக்கு கெடுதலானதல்ல நன்மை பயக்கக்கூடியது. எனவே தமிழினத்தவர் ஸ்ரீமாவோமீது நம்பிக்கை வைத்து வடபகுதியிலிருந்து கூட்டணி அபேட்சகர்களைத் சுமுகமான முடிவு காண முடியும்.''

காங்கேசன்துறைத் தொகுதி கம்யூனிஸ்ட்கட்சி அபேட்சகர் திரு.வ.பொன்னம்பலம் பேசியதாவது:

''சகல இனத்தவருக்கும் பொதுவான கொள்கைகளைக் கொண்டுள்ள எமது கட்சி, உழைப்பாளிகள் உயர்வுக்கு உழைக்கும் கட்சியாகும். கம்யூனிட்கட்சி சிங்களக்கட்சி எனச் சிலர் பொய்ப்பிரசாரம் செய்கின்றனர். தமது தனித்துவத்தைப் பேணியவாறு யு. என். பி.யுடன்சமஷ்டிக்கட்சி கூட்டுச் சேரமுடியுமானால் கம்யூனிஸ்ட்டுகள் தமது தனித்துவத்தை பேணிக்கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் ஏன் கூட்டுறவு கொள்ள முடியாது நிதானமாக நியாயமான கொள்கை இலட்சியங்களைக் கொண்ட திட்டம் ஒன்றினை கூட்டுக்கட்சி மக்கள் முன்பு சமர்ப்பித்துள்ளது. இத்திட்டம் எவ்விதத்திலும் தமிழ் மக்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியதல்ல. பதிலுக்கு பாதுகாப்பளிக்கக் கூடியதே இதுவரை தமிழ்க்கட்சிகள் குறிப்பாக எந்த அம்சத்தையும் தமிழருக்கெதிரானது என சுட்டிக் காட்டவில்லை.

உடுவில் தொகுதி சமசமாஜக் கட்சி அபேட்சகர் திரு. வீ. காராளசிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

நிற மத பேதமின்றி சகல தொழிலாளரும் ஐக்கியமாக மேதினம் கொண்டாடும் வேளையில் நமது நாட்டுத் தொழிலாளர் முதலாளி வர்க்க ஆட்சியை ஒழித்து தொழிலாளர் அரசை நிறுவ வேண்டும் என்ற எண்ணம் கொண்டு பொதுத்தேர்தலை எதிர்நோக்கவேண்டும்.

சுன்னுகம் பட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம், கோப்பாய் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் திரு எம் துரைராசா. திரு, எஸ் நடராசா, ஜனுப் மீரான் சாகிப், சாது பாண்டுரங்கன் ஆகியோரும் பேசினர்.

[illegible] அம்மன் கோவில் முன்றிலிலிருந்து ஆரம்பமாகிய மேதின ஊர்வலம்

# யாழ்ப்பாணச் சைவமங்கையருக்கு தொண்டாற்றப் புதிய வாய்ப்பு

## திருமதி ரத்னு நவரத்னம் வேண்டுகோள்

சேர். பொன். இராமநாதன் வாழ்ந்து புனிதமடைந்த அவர் திருமனை சமீபத்தில் புதுப் பொலிவுடன் திகழ்ந்தது. லேடி இராமநாதன் அம்மையாரால் தொடக்கப்பட்ட சைவமங்கையர்சபை பல்லாண்டுகளாக யாழ்ப்பாணத்திற் தொண்டாற்றி வருவது பலரும் அறிந்ததே. சென்ற மாதம் திருமதி நவரத்தினம் தலைமையில் இச்சபையின் சிறப்புக்கூட்டம் லேடி இராமநாதன் அம்மையார் இல்லத்திலேயே நடைபெற்றது.

டல்வேறு துறைகளிலும் வகுப்புக்கள் நடாத்தி சைவப் பெண்களிடையே தொண்டில் ஒரு உற்சாகத்தை உண்டாக்க வேண்டி இச்சபையின் ஆதரவில் சில துறைகளில் வகுப்புக்கள் தொடக்கப்பட்டிருக்கின்றன

இராமநாதன் கல்லூரியின் அதிபர் திருமதி அருணசலம் எல்லோரையும் வரவேற்ருர். திருமதி பசுபதி தலைமையில் டாக்டர் (திருமதி) கணேசாநந்தன் குழந்தைகளுக்கு தடுப்பு முறைகளின் (Vaccinations) இன்றியமையாமையை நயம்பட எடுத்துரைத்து தாய்மாரிடம் இதுபற்றி ஒரு விழிப்புணர்ச்சியை உண்டாக்கினுர்.

யாழ்ப்பாணத்தில் வீட்டுப் பணித்துறையில் பெருந்தொண்டாற்றிவரும் திருமதி வீரசிங்கம், இந்துமகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஆறுமுகம் தலைமையில் விசேட தீன்பண்டங்களைச் சுலபமாகச் செய்யும் முறைகளைச் செய்து காட்டினுர்.

துணிகளில் அழகுற அச்சுப்பதிக்கும் முறையைத் திருமதி மனுேன் அருணசலம் விளக்கிப் பின் செய்தும் காட்டினுர். மானிப்பாய் மகளிர் கல்லூரித் தலைவர் செல்வி பத்மாசனி ஆறுமுகம் தலைமை தாங்கி இவருக்கு நன்றி கூறும் முகத்தால் இத்துறையில் இவரது ஆர்வத்தை விரித்துரைததார்.

மேலைநாடுகளில் நாடகக்கலை அடைந்துள்ள முன்னேற்றத்தைத் தெள்ளென விளக்கிய கல்வி வட்டார வித்தியாதரிசி திருவாளர் சோமசுந்தரம் தமிழ்நாடகங்களை நாம் எப்படி அமைக்க வேண்டும், என்னென்ன மாற்றங்கள் செய்யவேண்டுமென்பதை மனதிற் பதியும்படி எடுத்துக் காட்டினுர்.

பெண்களின் வாழ்க்கையைச் செவ்வனே அமைக்கத் திருககுறள் படிப்பது மிகவும் அவசியம் என்பதால் திருக்குறளில் ஒரு ஆய்வு அரங்கு நிகழ்ந்தது. இதில் சகிதேவி கந்தையா, தங்கம்மா அப்பாக்குட்டி, நவமணி ஞானலிங்கம் ஆகியோர் பங்குபற்றினர்.

வைகாசி மாதம் 12-ம் திகதியும் அதைத் தொடர்ந்து ஒவ்வொரு போயாவிற்கு முன்தினமும், பி. ப. 2 மணி தொடக்கம் 5 மணி வரை திருக்குறள் வகுப்புகள், மனை இயற் கலை வகுப்புக்கள், நாடகக் கலை வகுப்புகள் நடைபெறும். இதில் பங்குபெற விரும்புவோர ரூபா 6/- வருடாந்த சந்தாவாகச் செலுத்தி சைவமங்கையர் சபை அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ள வேண்டும். தயவு செய்து வகுப்புகளில் பங்கு பற்ற விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை திருமதி கமலாம்பாள் பசுபதி, உபதலைவர், சைவமங்கையர்சபை, 157, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். அவர்களுக்கு அடுத்த 12-ந் திகதி நிகழ்ச்சிக்கு முன்பாக அனுப்பி வைக்கவும்.

யாழ்ப்பாணம் சைவமங்கையர் சபைத்தலைவர் திருமதி ரத்னு நவரத்னம் எழுதுவதாவது:

## சேவியர்.....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

2-வது இன்னிங்சை துடுப்பெடுத்து ஆட ஆரம்பித்த போது, இவர்கள் இப்போட்டியில் வெற்றி பெறுவதற்கு 60 நிமிடங்களில் 46 ஓட்டங்

# எந்தசாதியிலும் மகரிஷிகள் தோன்றலாம்

## அல்வாயில் அந்தர்யோகம்

அல்வாய், சனி

''எங்கும் எல்லாவற்றில் இறைவனையே காணவேண்டும். எல்லா உயிர்களிலும் இறைவனே கோயில்கொண்டிருப்பதை உணர்ந்தால், அவ்விதம் காணும் பண்பு நமக்கு ஏற்படும் நம் மனம் அப்படிப்பண்பட்டுவிட்டால் சாதி, சமய, கோத்திர, சாத்திரச் சண்டைகளே எழா. துவைதம் வசிஷ்டாதுவைதம் அத்வைதம் இவையெல்லாம் ஒரே மரத்தின் பல பழங்கள் இறைவனை அடைய ஒன்றரை இலட்சம் வழிகள் இருப்பதுாகச் சாத்திரங்கள்கூறுகின்றன இலட்சியமாகிய கடவுளை அடைவது பொதுவானது, இதை உணர்ந்து விட்டோமானுல் நம்மிடையே ஒற்றுமை ஏற்படும் வேற்றுமை மறையும்.

என்றிவ்வாறு கொழும்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஸ்ரீ ரங்கானந்தா அல்வாய்தெற்கிலே 'சிவபதி' இல்லத்திலே நடைபெற்ற அந்தர்யோகத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகை

பஜனை, ஜபம், தியான, மௌனம் பூசை, உபந்நியாசம், சந்தேக நிவர்த்தி முதலியன அந்தர் யோகத்தில் இடம்பெற்றன. பலர் இதில் கலந்து கொண்டனர். உருத்திரபுரம் மகாதேவ ஆசிரமத் தலைவர்ஸ்ரீ வடிவேல் சுவாமிகளும் இதில் கலந்துகொண்டு பேசினுர்.

பண்டத்தரிப்பு, சனி

இளவாலை திருக்குடும்பப் படாசாலையைச் சேர்ந்த மாணவிகள் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை, கடற்கோட்டை, மற்றும்பல இடங்களுக்கும் விஜயம் செய்து பார்வையிட்டுத் திரும்பினர்

## பெரியவளவு முருகனடியாள்

சங்கானை கிழக்கு பெரியவளவு முருகனின் பக்தையான திருமதி கணபதிப்பிள்ளை பொன்னம்மா சிவபதமடைந்து இன்று ஒருமாதமாகின்றது. அன்னரது 31வது கிரியைகள் இன்றுநடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் வளர்ந்துகொண்டே போகின்றது. படித்த பெண்களுக்குத் தக்கவேலையும் கிடைப்பது கடினமையாகி, அவர்கள்வீட்டிலே காலத்தை வீணாக்கி, தங்களுக்கும் குடும்பத்தாருக்கும் பெரும் பளுவாக வாழவேண்டிய நிலை ஏற்பட்டு பல பல சிக்கல்களும் சமூகத்தில் ஏற்படக் காரணமாகின்றது. வெளியில் சொல்ல முடியாத சங்கடங்களுக்கும் சோதனைகளுக்கும் உள்ளாகி இருக்கும் பெண்கள் கொஞ்சமல்ல பெண்களைப் பற்றிய இப்பிரச்னைக்கு பெண்கள்தான் முன்வந்து தக்க தீர்வு காணவேண்டும். அதற்கான நல்ல அறிகுறிகள் இப்போது யாழ்ப்பாணத்தில் தோன்றியுள்ளது வரவேற்கத்தக்கதாகும். ஓய்வு பெற்ற கல்வி இயக்குநரும், பெண்களின் முன்னேற்றத்திலே பெரும் ஆவல் கொண்டுள்ளவருமான திருமதி ரத்னநவரத்தினம் இப் பணிக்காக முன்வந்து, டர்களுக்கும் இச்சபை ஏற்பாடு செய்வது நல்லது. பிரிட்டனிலே பல சமூக சேவா ஸ்தாபனங்கள், வீடு வீடாகச் சென்று உதவக்கூடிய பணிகளைச் செய்து வருகின்றன. அவ்வித ஏற்பாட்டை இங்கும் இச் சபையார் செய்வதுடன், திருமணம், குடும்பச் சிக்கல்கள் முதலிய பல்வேறு பிரச்னைகளையும் தீர்க்கவும், நமது பெண் சமூகம் நல்லபடி முன்னேறவும் தொண்டாற்ற எவ்வளவோ இடமுண்டு. படித்த நமது பெண்மணிகள் மனம்வைத்தால் அவர்களால் ஆகாதது ஒன்றுமில்லை. இந்த நல்ல முயற்சியின் வெற்றியிலே சைவ சமூகத்தின் வெற்றியும் பெரிதும் அடங்கியுள்ளது. தமிழ்ப்பெண்மணிகள் இவ் விஷயமாகத் தங்கள் மேலான பொறுப்பையும் நிறைவேற்ற முன்வருவரென்பதே நமது பூரண நம்பிக்கை.

மாக வட்டமேசை மாநாடு வைத்து உத்தியோக மொழியாகச் சகலரையும் சிங்களத்தை ஏற்கவைப்பேன் எனத் தெரிவித்தது. வட்டமேசை மாநாடு மொழிப்பிரச்னை தீர நல்ல வழிதான், இதன்மூலம் நிரந்தரமான தீர்வு ஏற்படுத்தலாம். பதவி வேட்கைக்கு இதன்பின் மொழிப் பிரச்னையை உட்படுத்தக்கூடியநிலை ஏற்படாதுபோய்விடும். ஆனால் மற்ற எந்த அரசியல்கட்சியையும் சேர்த்துக்கொள்ளாது டட்லி செல்வாவுடன் இரகசிய ஒப்பந்தம்செய்து மொழிப்பிரச்னைக்குத் தீர்வு காண முயன்றார். இரகசிய ஒப்பந்தங்களால் மக்களின் பிரச்னைகளை எவராலும் தீர்க்கமுடியாது. கடந்த ஐந்தாண்டு ஆட்சிக்காலத்திலும் வாழ்க்கைச் செலவு விலைவாசி உயர்வு அடைந்துள்ளது. உலக வங்கியின் ஆலோசனையின்பேரில் அரிசி வெட்டை அமுல்நடத்தி நன்மை பயக்கக்கூடியது. எனவே தமிழினத்தவர் ஸ்ரீமாவோமீது நம்பிக்கை வைத்து வடபகுதியிலிருந்து கூட்டணி அபேட்சகர்களைத் தெரிவுசெய்யுங்கள். இதன் மூலம் தென்னிலங்கைச் சிங்கள மக்களின் ஆதரவு, ஒத்துழைப்பைப் பெற்றுத் தமிழரின் பிரச்னைகளுக்குச்

பாண்டிரங்கன் ஆகியோரும் பேசினர்.

பலாலி அம்மன் கோவில் முன்றிலிலிருந்து ஆரம்பமாகிய மேதின ஊர்வலம் மயிலிட்டி ஊறணி, காங்கேசன்துறை ஊடாக கீரிமலையை வந்தடைந்தது. பெருந்திரளானோர் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

2-வது இன்னிங்சை துடுப்பெடுத்து ஆட ஆரம்பித்த போது, இவர்கள் இப்போட்டியில் வெற்றி பெறுவதற்கு 60 நிமிடங்களில் 46 ஓட்டங்களைப் பெறவேண்டியிருந்தது.

இவர்கள் துடுப்பெடுத்தாட ஆரம்பித்ததும், இவர்களின் விக்கெட்டுகள் அடுத்தடுத்துச் சரியத் தொடங்கின. இக்கோஷ்டியினர் 50 நிமிடங்களில் 6 விக்கெட்டுகளை இழந்ததுடன் ஆக 29 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தனர். கனகநாயகம் கோஷ்டியின் விக்கெட் கீப்பர், நசல் ஹாமர் மிகச் சாதுரியமாக நான்கு வீரர்களை ஆட்டமிழக்கச் செய்தார். சேவியர் கோஷ்டியின் துடுப்பாட்ட வீரர்களான எம். தெய்வேந்திராவும் எம். சுரேந்திராவும் கடைசி நிமிடங்களில் வேகமாக ஓட்டங்களைப் பெற்றமையால், கனகநாயகம் கோஷ்டியை ஆட்ட இறுதியில் நான்கு அதிகப்படியான விக்கெட்டுகளால் தோல்வி பெறச் செய்தனர். சேவியர் கோஷ்டி ஆட்ட இறுதியில் 6 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 49 ஓட்டங்களை பெற்றிருந்தது.

(தே. நி)

சுவாமி ஸ்ரீ ர[illegible]நந்தா அ'வாய்தெற்கிலே 'சிவபதி' இல்லத்திலே நடைபெற்ற அந்தர்யோகத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

''மகான்கள் எந்த சாதியிலிருந்தும் தோன்றக் கூடும் பாரதம் எழுதிய வியாஸர் செம்படவசாதியைச் சேர்ந்த தாய்க்கும் பராசரருக்கும் பிறந்தவர் நாரதருக்கு தகப்பனின் பெயரே தெரியாது. அவரது தாய் ஒரு பணிப்பெண். இராமாயண காவியம் எழுதிய வால்மீகி ஒரு கொள்ளைக்காரர்; வேடுவர். மகரிஷிகள் எந்த சாதியிலும் தோன்றக்கூடுமாதலால் எந்த சாதியையும் இழிவாகக் கருதப்படாது'' என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

மதி கனகம்பிள்ளை பொன்னம்மா சிவபதமடைந்து இன்று ஒருமாதமாகின்றது. அன்னார் 31வது நினைவுக்கிரியைகள் இன்று நடைபெறுகின்றபோதே சங்கானை கிழக்குவாசிகள் குறிப்பாக பெரியவளவு முருகனடியார்கள் அன்னாரை நினைவு கூருதலவசியம்.

பொன்னையா லட்சுமி தம்பதிகளுக்குப் புதல்வியாய் 20-4-1903 ஆம் ஆண்டு அவதரித்த பொன்னம்மா திருமதி கனகம்பிள்ளையாகி இல்லறத்தில் நல்லறம்காத்து வாழ்வாங்குவாழ்ந்தவர். நெற்றியில் விபூதி. சதாசிரித்த முகம், அன்பொழுகும்வார்த்தை, அமைதி இத்தியாதி பண்புகளுடன் விளங்கிய இவர் கடந்த ஏப்ரல்மாதம் 3ம் திகதி முருகனடியெய்தினார்.

பெரியவளவு முருகன் ஆலய கூட்டுப் பிரார்த்தனை சபையை ஆரம்பிப்பதற்கு இவர் அரும்பாடுபட்டவர் முருகனின் அடிமையாகிவிட்ட அவர் தமதுபிள்ளைகளும் சுற்றமும் சூழ மற்றும் குழுவினருடன் சேர்ந்து முருக பிரார்த்தனை செய்வார்.

தம்குடும்பத்தையும் அயலையும் விருந்தினரையும் பேணி அமைதிவாழ்வுவாழ்ந்த திருமதி பொன்னம்மா தீவிரசமயப்பற்றுக் கொண்டவர். தமது பிள்ளைகள் சமய ஒழுக்கந்தவறாதிருக்க வேண்டுமென்பதில் மிக்க கரிசனையுடனிருந்தார்.

சங்கானை கிழக்கு மக்களும் பெரியவளவு முருகன் அடியார்களும் அன்னாரை மறுக்கமுடியாது. அவரது ஆத்மாசாந்தியடைப் பிரார்த்திப்போம்.

-பெரியவளவான்-

# 'சிங்களம் ஒருபாடமாக போதிக்கப்பட வேண்டும் சிற்றூழியரின் இன்றையநிலை எதிர்காலச்சந்ததிக்குநேரக்கூடாது'

தாவடி, சனி

'சுயபாஷையில் சித்தியடைந்து சிற்றூழியர்களாக அரசாங்க சேவையில் இருக்கின்ற எங்களுக்குச் சம்பள உயர்ச்சி, பதவி உயர்ச்சி என்பன இல்லை. சிங்களம் படிக்காத காரணத்தால் ஆஸ்பத்திரிகளில் மருந்து கலக்கும் ஊழியர்கள் நால்வரை வேலையிலிருந்து நீக்கியுள்ளார்கள். வடமாகாணத்திலேயுள்ள மருத்துவ மாதர்களும்இதே ரீதியில்தான் கஷ்டப்படுகின்றார்கள். சிற்றூழியர்கள் சிங்களத்தில் 8-ம் வகுப்புச் சித்தியடைய வேண்டுமென்பது நியாயமானதா?

திருநெல்வேலிச் சந்தியடியில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் தேசிய அரசாங்க சுகாதாரச் சேவைத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. பொ. தேவராசா பேசும்போது மேற்கண்டவாறு கேட்டார்.

நல்லூர் கிராமசபைத்தலைவர் திரு. பொ. குமாரகுலசிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

'எங்கள் வருங்கால சந்ததியினர் சிங்களம் படிக்கக்கூடிய வழிவகைகளைச் செய்து உதவுதல் வேண்டும். தமிழ்ப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலேசிங்கள ஆசிரியர்களை நியமித்து அதையும் ஒரு பாடமாகப் போதித்தால் இன்று நாமடைந்துள்ள நிலைமை வருங்காலத் தமிழ் சமுதாயம் அடையமாட்டாது, சிற்றூழியர்கள் சிங்களம் படிப்பதற்கு வசதியுமில்லை. நேரமுமில்லை. சிற்றூழியர்கள் பலர் 24 மணித்தியாலமும் வேலைசெய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியுமிருக்கின்றார்கள். இந்நிலையிலே சிங்களத்தைப் படித்துச் சித்திபெற முடியுமா?

தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் நல்லூர்த் தொகுதி வேட்பாளர் திரு. சி. அருளம்பலம் பேசும்போது, தொழிலாளர்கள் இந்நாட்டின் முதுகெலும்பு. எனவே அவர்களைப் போற்ற வேண்டும்; அவர்களின் நலன்களுக்காகப் பாடுபட வேண்டும்' என்றார்.

'தாம் தேர்தலில் வெற்றிபெற்றதும் வேலையில்லாப் பிரச்னை, சிற்றூழியர் மொழிப்பிரச்னை என்பனவற்றையெல்லாம் சிந்தனையில் வைத்துச் செயலாற்றுவேன்' என்றும் திரு. அருளம்பலம் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் திரு சங்கரப்பிள்ளை, திரு. மு. மகாலிங்கம், திரு. ஐயன்னு, திரு. சிவசுப்பிரமணியம் உட்படப் பலர் உரையாற்றினர்.

## விற்பனைக்கு

சொந்தப் பாவிப்பில் உள்ள 25 ஸ்ரீ மூவாயிரம் தொடர் இலக்கமுள்ள மர்சி பேர்கூசன் 135 விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு திரு அ. குணரத்தினம், அல்லின் வீதி, காரைநகர். 2095

## "மாவட்ட சபையை ஏன் எதிர்க்க வேண்டும்?"

— பிரதமர்

வேருவலை, சனி

நான் மக்கள் குழுக்களைப் பற்றி கேட்டபொழுது, எவ்விதம் அரசாங்கத்தை நடத்துவதில் மக்களைச் சேர்த்துக்கொள்ளமுடியும் என்பது தனக்கு விளங்கவில்லை என்று அம்மையார் கூறினர் இது அவருடைய பார்வையைக் காட்டுகிறது. திரு. பண்டாரநாயக்கா வாழ்ந்த காலத்தில் அம்மையாரை எங்குமே அரசியலுக்கு அழைத்துச் செல்லவில்லை. இப்பொழுது அவர் எனக்கு அரசியல் சொல்லித்தர முயற்சிக்கிறார் என்று வேருவலை, களுத்துறை, பாணந்துறை, மொறட்டுவை ஆகிய இடங்களில் நடந்த தேர்தல் கூட்டத்தில் பிரதமர் கூறினர்.

திரு. பண்டாரநாயக்காவால் கொண்டுவரப்பட்ட நன்செய் நிலங்களைப்பற்றிய மசோதாவை ஞாபகப்படுத்திப் பாருங்கள் இந்தமசோதாபற்றி நாட்டில் பெரும் விவாதமே ஏற்பட்டது. இத்த விவாதம்பற்றி திரு பண்டாரநாயக்கா என்ன சொன்னார்?

எதிர்கட்சியிடமிருந்துவருகின்ற பலவகை எதிர்ப்புக்களையும் எதிர்கொள்வேன் என்றார்.

மக்களை கொண்ட எவ்வளவோ குழுக்கள் இந்நாட்டில் உள்ளூராட்சி மன்றங்கள். கிராமசபைகள், பட்டிண சபைகள் போன்றவற்றில் பங்கு கொள்கின்றன இச்சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் பங்கு கொள்ளவில்லையா? மேலும் தேவையாக இருந்தால் இதுபோன்ற குழுக்களை அமைக்கலாம். ஆனால் மக்கள் குழுக்களை ஏன் தேர்தல் குழுக்களாக வைத்திருக்க வேண்டும்?

மக்கள் குழுக்களை மக்கள்தான் தெரிவுசெய்வார்கள் என்று இவர்கள் சொல்வார்களேயானல் மாவட்ட சபையை ஏன் எதிர்க்க வேண்டும்? நான் மாவட்ட சபையை உருவாக்க ஒரு மசோதாவைக் கொண்டு வந்தேன். நான் ஒரு ஜனநாயகவாதியாகையால், அப்பொழுது எதிர்க்கட்சியினரின் எதிர்ப்பால் அதனை வாபஸ்பெற்றேன். இந்த மசோதாவை திரும்பவும் கொண்டுவரமாட்டேன் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கூட்டணியினர் இந்த மக்கள் குழுக்களால் மாவட்ட சபைக்கு சிறிது கதவைத் திறந்துவிடுகிறார்களா? இந்தக் குழுக்கள் மக்களால் நியமிக்கப்படுமானல், அது மாவட் சபைதான். அல்லது தேர்தல் குழுவேயாகும்.

வேருவலையில் அவர் பேசுகையில், இத்தேர்தலில் கூட்டணியினர் வெற்றிபெற்றால் ஜனநாயகம் முடிந்துவிடும். பொதுவுடமைவாதிகள் கூட்டணியில் அங்கம் வகிப்பதே பொதுவுடமையின் முதல்படி என்பதை திரு. பீற்றர் கெனமனல் மறுக்க முடியுமா? எனப் பிரதமர் கேட்டார். அவர் கூட்டணியினரின் தேர்தல் விஞ்ஞாபனம்பற்றிக் குறிப்பிட்டார். வேருவலையில் 'பிரயாணத்தின் முடிவு' என்ற படத்தைக் கூட்டணியினர் காட்டுகிறார்கள். இலங்கையின் முன்னேற்றப் பிரயாணம் நிற்காது இந்தப் பிரயாணத்துக்குத் துணைபுரியும் வகையில் வேருவலை மக்கள் திரு. பகீர் மரக்காருக்கு பெரு வெற்றியை அளிக்க வேண்டும்.

தெகியோவத்தை முன்னள் ல. ச. ச. கட்சி ஆட்சிமன்ற உறுப்பினரும், கடந்த தேர்தலில் அவிசாவளையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்டவருமான திருமதி சோமா விக்கிரமநாயக்கா, வேருவலை ஐ. தே. கட்சி தேர்தல் மேடையில் தோன்றினார். இப்பொழுது நடந்து வரும் தேர்தல் பிரசாரத்தில் இதுவே அவரது முதல் தேர்தல் மேடைத்தோற்றமாகும்.

பிரதமர் களுத்துறையில் பேசுகையில் கூட்டணியினர் ஆட்சிக்கு வருவார்களேயானல் திரு. கொல்மோல்வின் சில்வா களுத்துறையின் ஆட்சி ... தேர்தல் குழுதான் களுத்துறையை ஆட்சி செய்யும். அவர்கள் பொலிசையும் மற்றும் நிலையங்களையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பர். மக்கள் சுதந்திரம் முடிவடையும். இதுதான் கேரளத்திலும் மேற்கு வங்காளத்திலும் நடைபெற்றது.

திரு வி. எல் விஜயமன்னே பேசுகையில் திரு. கொல்மோன் டி சில்வா? ... கால் மோன்டலி குணவர்த்தன கடந்த 20 ஆண்டுகளாக களுத்துறைத் தொகுதிக்கு பயனுள்ள எவ்வித வேலையும் செய்யவில்லை என்றார்.

களுத்துறை நகராண்மைக் கழகத் தலைவரும், 1965ஆம் ஆண்டு களுத்துறை ஐ. தே. கட்சி வேட்பாளருமான திரு. ஸ்ங்ஸ்லி விக்கிரமசிங்கா பேசுகையில் ஐ.தே. கட்சியினரிடையே ஏற்பட்ட வேற்றுமைகளால் பிரிவினை தோன்றி 1965 ஆம் ஆண்டுத் தேர்தலில் தன்னைத் தோல்வியுறச் செய்தது என்றார்.

பாணந்துறையில் பிரதமர் பேசுகையில், இந்த மழையிலும் இவ்வளவு பெருங்கூட்டமாக வந்திருப்பதற்காக மக்களுக்கு நன்றி தெரிவித்தார். அவர்தொடர்ந்து பேசுகையில் உலகில் எந்த ஓர் அரசியல் கட்சியும் ல. ச. ச. கட்சியைப் போல கொள்கைமாற்றம் செய்யவில்லை என்றார்.

## சைவப் பெரியாருக்கு 'சுவாமி' பட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பிரபலசைவப்பெரியாரும் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி அதிபருமான திரு. மு. ஞானப்பிரகாசத்தின் சைவவாழ்வையும் பணியையும் பாராட்டி யாழ்ப்பாணம் இந்துக்கலாசாரநிலையம் 'சுவாமி' என்னும் சிறப்புப் பட்டத்தை அளித்துப் பாராட்டியுள்ளது.

இந்துகலாச்சார நிலையாதிபதி திரு. சிவ. உ. சோமசேகரன் பட்டமளித்துப் பேசும் பொழுது பிறசமயத்திலே ஆத்மீகத் தலைவர்களுக்குரிய பட்டமும் உடையும் இருப்பதுபோலச் சைவத்திலே பிராமணர் அல்லாதாரிடையே அதிகம் பேர் பட்டமின்றியிருப்பது சமய வளர்ச்சிக்குத் தடையாகவுள்ள தென்றும் இதனைப் போக்கும் வகையில் சைவ உடையும்சின்னமும் தரித்து வரும் பிரபல சைவப் பெரியார்க்கு ஞானப்பிரகாச சுவாமிகளின்மரபைப்போற்றிப் பாதுகாக்கும்வகையில் சுவாமி ஞானப்பிரகாசர் என்னும் பட்டத்தைச் சூட்டியதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கல்லூரி வீதி வித்தியா ஆச்சிரமத்தில் நடைபெற்ற இவ்விழாவில் ஏராளமானேர் கலந்து கொண்டனர். சுவாமி ஞானப்பிரகாசர் அரியதோர் சொற்பொழிவாற்றினர்.

சுவாமிகளின் தொண்டினைப் பாராட்டிச் சித்திரச் சுடரொளி ஆசிரியர் திரு நா. செல்லப்பா, பகவதி மாதவிதழ் ஆசிரியர் திரு. வி. பொன்னம்பலம் ஆகியோர் உரைநிகழ்த்தினர்

## மரண அறிவித்தல்

அந்தோனியாப்பிள்ளை

காலஞ்சென்ற சில்லாலை மனுவேற்பிள்ளையின் மனைவியும், யோசவ் வேதநாயகம், ஞானப்பிரகாசம், யோசவின் மனுவேற்பிள்ளை லூய்சா, மாகிறேற், பெர்னதேத், ஆகியோரின் தாயாரும், இராசரத்தினம், அந்தோனிப்பிள்ளை மரியநாயகம், செல்வம், றேஸ், பூமணி ஆகியோரின் மாமியாரும் வண. யோன் சிங்கராயரின் சிறிய தாயாரும், மனே ஜோசப்பின் பேத்தியுமாகிய அந்தோனியாப்பிள்ளை காலமாகி விட்டார். இறுதிச் சடங்கு இன்று மாலை சில்லாலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் தயவுடன் ஏற்றுக்கொள்ளவும். 2096

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு மே மாதம் 3-ம் திக அச்சிட்டுவெளியிடப்பட்டது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org